விலை: 60.00
பக்கங்கள் : 20

website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 054 வள்ளுவர் ஆண்டு 2055 தை 28 ஞாயிற்றுக்கிழமை (11.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே




### அரசியல் நிலைவரங்கள் தொடர்பில்
# ரணில் - ஜெய்சங்கர் ஆஸியில் கலந்துரையாடல்



(பெர்த்)

இலங்கையின் அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆகியோர் அவுஸ்திரேலியாவில் கலந்துரையாடினர்.

19

# அதிகமான அதிகாரங்களை வழங்கத் தயாராகவுள்ளோம்
### இந்திய ஊடகமொன்றில் ஜனாதிபதி

(கொழும்பு)

மாகாணங்களுக்கு அதிகமான அதிகாரங்களை வழங்கத் தயாராகவுள்ளோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றிற்கான நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த வருடம் மாகாண சபை தேர்தல்களை நடத்துவோம்.

அக்கிராசன உரையில் நான் தெரிவித்ததுபோல ஒவ்வொரு மாகாண சபைக்கும் அதன் சொந்த பொருளாதாரத்தை வழங்க விரும்புகின்றோம்.

04

### திங்கள் முதல்
## முட்டை விலை அதிகரிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் திங்கள் முதல் முட்டை விலை அதிகரிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலத்தில் சந்தையில் முட்டைக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலை காணப்படு

19

### குருநகரில்
## ஆணொருவரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - குருநகர்ப் பகுதியில் இனந்தெரியாத நபரொருவரின் சடலமொன்று நேற்றுக் காலை அடையாளம் காணப்பட்டுள்ளது.

குருநகர் கடல் கரையோரப் பகுதியில் மிதந்த நிலையில் சடலம் அடையாளம்

19


### போர்க் காலச் சூழ்நிலையில்
# வவுனியாவில் தமிழ் இளைஞன் காணாமல்போன சம்பவம்
## சரத் பொன்சேகா பொறுப்புக்கூற வேண்டும் - வவுனியா மேல் நீதிமன்றம்

(வவுனியா)

வடக்கு, கிழக்கில் போர் நடைபெற்ற காலத்தில் 18 வருடங்களுக்கு முன்னர் வவுனியா ஓமந்தையில் தமிழ் இளைஞர் ஒருவர் காணாமல் போன சம்பவத்துக்கு இலங்கை இராணுவம் மற்றும் அப்போதைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா பொறுப்புக்கூற வேண்டும் என வவுனியா நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

(04ஆம் பக்கம் பார்க்க)

# ஜனநாயகம், மனித உரிமைகளை வலுப்படுத்துவது முக்கியமானது
### சபாநாயகரிடம் அமெரிக்கத் தூதுவர்



(கொழும்பு)

ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை இலங்கையில் வலுப்படுத்துவது முக்கியமானது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் சபாநாயகரிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர்

19

# 11 நாட்களுக்கு முன் குழந்தை பிரசவித்த இளம் தாய்
### கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு



(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பில் 11 நாட்களுக்கு முன் குழந்தை பிரசவித்த இளம் தாய் ஒருவர் நேற்றுக் காலை கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

19

# வரி அதிகரிப்புக் காரணமாக அரசின் வருமானம் அதிகரிப்பு
### நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

அரசாங்கத்தால் அறிமுகம் செய்யப்பட்ட பெறுமதி சேர் வரி அதிகரிப்பு காரணமாக ஜனவரி மாதத்தில் அரசாங்கத்தின் வரு

19

## இருவேறு துப்பாக்கிச்சூடு
### இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்ற இருவேறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நீர்கொழும்பு - கல்கந்த சந்தியில்

04

# தேர்தலை ஒத்திவைக்க ஜனாதிபதி முயற்சி
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்




(அம்பாந்தோட்டை)

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர்

19


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியவகை ஆமையுடன் மன்னாரில் மூவர் கைது



(மன்னார்)

மன்னார் வங்காலை கடல் பகுதியில் அரிய வகை ஆமை ஒன்றை உயிருடன் உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் நேற்று சனிக்கிழமை வங்காலை கடற்படையினரால் கைது செய்யப்படுள்ளனர்.

குறித்த அரிய வகை ஆமை கடல்பகுதியில் பிடிக்கப்பட்டு இறைச்சிக்காக கரையை நோக்கி கொண்டு வந்த நிலையில் படகில் இருந்த மூன்று மீனவர்களையும் கைது செய்து மனனார வனஜீவராசிகள் திணைக்களத்திடம் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சந்தேக நபர்களை கடற்படையினர் ஒப்படைத்திருந்தனர்.

இந்த நிலையில் மூவரையும் முதலக்கட்ட விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் வனஜீவராசிகள் திணைக்களம் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன்.

குறித்த ஆமைய்ய பிடிக்க பயன்படுத்திய வலை கள்,வெளி இணைப்பு இயந்திரம், இஞ் சின் போன்றவற்றையும் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-7,285)


## மலிவு விற்பனை

SILVER SHIELD

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-8326)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

## Hybrid International Hub(pvt) ltd

கனடா, பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான விசிட் விசா மற்றும் வேலை விசாக்கள்

தேவைப்படுபவர்கள் இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

**Hybrid International Hub(pvt) ltd**

யாழ்ப்பாணம்

**021 222 1265, 076 250 0098, 077 815 5920** (C-8325)

## யாழ் கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

T.P : 077 711 0383

A/L பெறுபேறுகளை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவியரே!

வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே!!!

உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

கேக் ஐசிங், கேக் மற்றும் உணவு தயாரித்தல், Hair Dressing Facials, Pedi cure, Mani cure, மணப்பெண் அலங்காரம், பலவிதமான சேலை அணியும் முறைகள் (Beautician பயிற்சி) (C-8319)

கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் : 14.02.2024 புதன் காலை 10.00

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் : 18.02.2024 ஞாயிறு காலை 10.00

## வீடு வாடகைக்கு

யாழ் இந்து. தட்டாதெருசந்திக்கு அருகில் அரசடி வீதியில் ஒரே வளவில் இரு வீடுகள் வாடகைக்கு உண்டு.தனித்தோ/ சேர்த்தோ வழங்கப்படும்.

நிறுவனங்களுக்கும் எற்றது. (18966)

**071 034 7747**

## காணி விற்பனைக்கு

புத்தூர் மட்டுவில் பிரதான வீதியோரம் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 20 அடி பாதையுடன் காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

180 பரப்பில் 51 பரப்பு விற்பனையாகியுள்ளது.

**1 பரப்பு - 2 1/2 இலட்சம்** (18975)

பார்வையிடும் நேரம் :
காலை 8.30 தொடக்கம் 6.00 வரை

மேலதிக விபரங்களுக்கு **074 260 0617, 076 659 0583, 076 109 8504**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127


# Jaffna Science Association
# யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம்

**Call for Application for**
**Professor Alagaiah Thurairajah Memorial Gold Medal for Excellence in Engineering, Science, and Technology**

The Jaffna Science Association is proud to introduce the Professor Alagaiah Thurairajah Memorial Gold Medal for Excellence in Engineering, Science, and Technology from this year (2024) onwards. This prestigious award aims to honor an outstanding individual who has made a significant contribution to the development of the Northern Province of Sri Lanka, actually engages in regional development, and dedicates his/her time and expertise to develop his/her professional services, research engagement, and community outreach initiatives.

**Eligibility criteria for the Award:**

To be considered for the award, applicants must meet all of the following criteria:

- Be a life member of the Association
- Be a citizen of Sri Lanka or hold a permanent residency visa for Sri Lanka for at least 10 years prior to the award being granted.
- Either currently employed within the Northern Province, Sri Lanka, or may have retired in the past. If the candidate is retired, he/she must have served in the Northern Province actively for a minimum of ten years before his/her retirement.
- Possess a record of notable achievements in the EST field in the Northern Province
- Carried out his/her professional duties honestly, competently, ethically, and with unwavering commitment to the public and the profession.
- Supported the Northern Province's residents and society by attending to their needs.
- Contributed to the economic and sustainable development of Sri Lanka.
- Used innovative methods or ideas and smart techniques in their projects or careers.
- Demonstrated that their work has made a significant difference and brought about positive change in the development of the Northern Province.

Closing Date: 08.03.2024
For further information and the application form please contact us through
Website: https://www.thejsa.org/
Facebook: https://www.facebook.com/jaffnascienceassociation/
Email: sivanayani@gmail.com

General Secretary,
Jaffna Science Association

C-8321


## K.T.C

ஆஸ்பத்திரி வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு ஆசிரியர்கள் தேவை.

குடியுரிமை - 6,7,8,9 (வகுப்புக்கள்)
புவியியல் - 6,7,8,9(வகுப்புக்கள்)
சுகாதாரம் - 6,7,8(வகுப்புக்கள்)
I.C.T - 6,7,8 (வகுப்புக்கள்)

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்

**076 176 8821**

நிர்வாகி
ஞான.திருக்கேதீஸ்வரன் (ஆசிரியர்) (C-8320)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம்(V) 1990 ஆம் ஆண்டு பிறந்த அச்சுவினி நட்சத்திரம் கிரகபாவம் 37 1/2 அரச தொழில் புரியும் மணமகளுக்கு அரச தொழில் புரியும் நற்குணமுள்ள மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தரகர் தேவையில்லை. (18960)

**076 909 4593**

## தேவை

களஞ்சியசாலையாக பயன்படுத்துவதற்கு யாழ். நகருக்கு அண்மையாக தரிப்பிட வசதியுடன் கூடிய இடம் தேவை.

களஞ்சியசாலை முகாமையாளர் மற்றும் வேலையாட்களும் தேவை.

தொடர்புகளுக்கு : (C-8322)

**076 822 7515**

## WIN REPAIR

சகலவிதமான குளிர்சாதனப் பெட்டிகளும் சலவை இயந்திரங்கள், A/C களும் பழுதடைந்து விட்டதா? கவலையை விடுங்கள் உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையிலும் உத்தரவாதத்துடனும் செய்து தருகின்றோம். (18965)

**076 906 4682**

## வீட்டு உதவியாளர் தேவை (பெண்)

யாழ்ப்பாணத்தில் வீடு மற்றும் சமையல் உதவிகள் செய்யக்கூடிய பெண் உதவியாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.வாரத்தில் 4 நாட்கள் மட்டும் 40 வயதிற்கு மேற்பட்டோர் விரும்பத்தக்கது. (18964)

**077 869 5354**
**076 897 2637**

## ICT, விஞ்ஞான வகுப்புக்கள் தரம் 6 - 11 (T/E)

5 வருட கற்பித்தல் அனுபவம் கொண்ட ஆசிரியரால் நுணுக்கங்களை பயன்படுத்தி இலகுவான முறையில் வீடுவந்து தனியாகவோ/ குழுவாகவோ, Zoom ஊடாகவோ கற்பிக்கப்படும். 75% புள்ளிகளுக்கு மேல் பெற உத்தரவாதம் (18961)

**070 765 9269**

## வீடு விற்பனைக்கு


உயரப்புலம் ஆனைக்கோட்டையில் 1 1/2 பரப்பு காணியில் கிழக்கு வாசல் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : (18973)

**076 105 6343**
**076 928 4191**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்களமாக காட்சி அளித்த முற்றவெளி மைதானம்





(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற இசை நிகழ்வில் ஏற்பட்ட அசம்பாவிதங்களில் சிக்கி மூவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டுள்ளனர்.**

அதேவேளை அசம்பாவீதங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், 6 பேர் யாழ்ப்பாண பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இசை நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை, இலவசமாக இசை நிகழ்வை கண்டு கழித்துக்கொண்டிருந்த ரசிகர்கள் தடுப்புக்களை உடைத்து எறிந்துகொண்டு கட்டண அனுமதி பெற்று, இசை நிகழ்வை கண்டு களித்துக்கொண்டிருந்த ரசிகர்கள் வலயத்தினுள் நுழைந்து ,மேடைவரையில்சென்றுகமராக்கள் பொருத்தப்பட்டு இருந்த உயரமான மேடைகள், ஒலி அமைப்புக்கள் செய்யப்பட்டிருந்த மேடைகள், பனை மரங்கள் உள்ளிட்ட உயரமான இடங்களில் ஏறி அட்டகாசத்திலும் ஈடுபட்டனர். கட்டுக்கடங்காமல்போன ரசிகர் கூட்டத்தால் கதிரைகள், தண்ணீர் தாங்கிகள் உள்ளிட்டவை சேதமாக்கப்பட்டன.

பொலிஸார், விசேட பொலிஸ் அதிரடி படையினர் மேலதிகமாக மைதானத்திற்கு வரவழைக்கப்பட்டு , நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இசை நிகழ்வை ஆரம்பித்து ஒரு சில மணித்தியாலத்திற்குள் அவசர அவசரமாக முடித்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-33)

## திருமலையில் கப்பல் கட்டும் தளம்

(திருமலை)

இந்திய பாதுகாப்பு அமைச்சின் இணைச் செயலாளர் பிரபாகர் மற்றும் அவரது கடற்படைக் குழுவினர் திரு கோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்திற்கு மரியாதை நிமித்தமாக வருகைதந்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பில் திருகோணமலை துறைமுகத்தில் கப்பல் கட்டும் தளம் ஒன்றை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

திருகோணமலை துறைமுகத்தை மேம்படுத்துவதன் ஊடாக வங்காள விரிகுடாவில் பயணிக்கும் கப்பல்களுக்கு அவசர நிலையின் போது விரைவான சேவைகளை வழங்க முடியும் என இந்திய பாதுகாப்பு அமைச்சின் குழுவினர் ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.

செல்வி. **குணரட்ணம்** (அன்ரி)

**கணபதிப்பிள்ளை**



தோற்றம்: 04.09.1940

மறைவு:-03.02.2022

அன்பே உருவாகி- எம்மீது கொண்ட அன்புக்கே
உரமாகிய எங்கள் அன்ரி கண்முன்னே
வாழ்ந்த காலம் கனவாகி
போனாலும் எம்முள்ளே
உங்கள் முகம் என்றுமே உயிர்வாழும்
ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
ஆறாது எங்கள் துயர்.

(18962)

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.
077 659 5256

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப்படையின் 73 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு உதைபந்தாட்ட போட்டிகள்

இலங்கை விமானப் படையின் 73 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாணத்தில் உள்ள உதைபந்தாட்ட சங்கங்களிற்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நேற்று வைபவ ரீதியாக ஆரம்பமானது.

11 அணிகள் மோதிக் கொள்ளும் குறித்த போட்டி எதிர்வரும் மார்ச் மாதம் முதல் வாரத்தில் நிறைவடையவுள்ளது.

குறித்த ஆரம்ப நிகழ்வில் இரணைமடு விமானப்படை கட்டளை அதிகாரி கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார். (நி-100-316)



## வவுனியா...

ஓமந்தை இராணுவ காவலரணில் படையினரின் பொறுப்பின் கீழ் இருந்த நிலையில், காணாமல்போன கந்தசாமி இளமாறன் என்பவர் சம்பந்தமான ஆட்கொணர்வு மனு தொடர்பான விசாரணை அண்மையில் வவுனியா மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

வழக்கின் தீர்ப்பை வழங்கிய வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன்,கந்தசாமி இளமாறன் என்ற இளைஞன் காணாமல் போன சம்பவத்திற்கு அன்றைய ஓமந்தை பிரதேசத்திற்கான இராணுவக் கட்டளை அதிகாரி, வன்னி பிராந்திய கட்டளை தளபதி மற்றும் அப்போதைய இராணுவ தளபதி ஆகியோர் பொறுப்புக்கூற வேண்டும் என தீர்ப்பளித்திருந்தார்.

2006 ஆம் ஆண்டு அந்த இளைஞன் காணாமல்போன சந்தர்ப்பத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இராணுவ தளபதியாக பதவி வகித்ததுடன் வன்னி பிராந்திய இராணுவக் கட்டளை தளபதியாக மேஜர் ஜெனரல் டப்ளியூ.யு. பீ. எதிரிசிங்க கடமையாற்றினார்.

மேலும் வழக்கின் தீர்ப்பை வழங்கிய வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி, இளைஞன் காணாமல்போனமை சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டார்.

அத்துடன் காணாமல்போனதாக கூறப்படும் இளமாறன் என்ற இளைஞன் உயிருடன் இருப்பாரேயானால், எதிர்வரும் ஜூலை மாதம் 3 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறும் நீதிபதி, இலங்கை இராணுவத்திற்கு உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை செயற்படுத்தவில்லை என்றால், இதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள மூன்று இராணுவ அதிகாரிகளும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 3 ஆம் திகதிக்கு முன்னர் காணாமல்போன இளைஞனின் குடும்பத்திற்கு ஒரு மில்லியன் ரூபாவை இழப்பீடாக செலுத்த வேண்டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கந்தசாமி இளமாறன் என்ற இளைஞன் கடந்த 2006 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இருந்து ஓமந்தை இராணுவ காவலரணுக்கு சென்ற பின்னர் காணாமல் போனார்.

எது எப்படி இருந்த போதிலும் காணாமல்போன இளைஞனை தாம் கைது செய்யவோ அல்லது தடுத்து வைக்கவோ இல்லை என இராணுவம் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தது.

எனினும் அந்த இளைஞன் ஓமந்தை இராணுவ காவலரணுக்கு வந்தார் என்பது காவலரணில் வந்து செல்லும் நபர்களை பதிவு செய்யும் ஏட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாக மனுதாரர் சார்பில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரத்னவேல் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார். (ம-7)

## மரண அறிவித்தல்



### திருமதி தாமோதரம்பிள்ளை பரமேஸ்வரி

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் 6ஆம் வட்டாரம் மண்டைதீவை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்புத்துறையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி தாமோதரம்பிள்ளை பரமேஸ்வரி அவர்கள் நேற்று (10.02.2024) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னக்குட்டி தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சிவகுரு - நாகமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை அவர்களின் பாசமிகு துணைவியாரும் சந்திரகலா, சந்திரகாந்தன் (சுவிஸ்), சந்திரலதா (பிரான்ஸ்), சந்திரமோகன் (லண்டன்), சந்திரவதனா, சந்திரபாலன், சந்திரபாமா (ICT Officer, கச்சேரி), சந்திரபிரியா (பல் வைத்தியர், கொடிகாமம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவகுமாரன், கல்யாணி (சுவிஸ்), ஜெகதீஸ்வரன் (பிரான்ஸ்), கோணேஸ்வரி (லண்டன்), றமேசன், கவிச்சந்திரன், புருஷோத்தமன் (பல் வைத்தியர் - Jaffna Dental Clinic) ஆகியோரின் அன்பு மாமியாரும் சஜீவ், தனுஜன், விக்கினேஸ்வரன், கிஷான், அக்ஷயன், அனீஷ், ஹரீஷ், ஜதீஷ், லசிஹா, ஜெசியா, சஜிந், சஜிகாந், ரக்ஷின், விதுஷனா, அனன்யா, அஷ்வின், ஆரோன் சேயோன், அத்விகா சோழன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்

இல.44, இலந்தைக்குழும் வீதி,
(மாம்பழம் சந்தி),
கொழும்புத்துறை.

சந்திரகாந்தன் : + 41 77 904 8668,
சந்திரமோகன் : + 44 74 260 79440,
சந்திரவதனா : 077 324 6857

(18972)

## இன்றைய ஆட்டங்கள்

வடமராட்சி லீக் அனுமதியுடன் கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டு கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான அணிக்கு 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஸ்ரீஅம்பாள் அணியை எதிர்த்து சிவகுமரன் அணியும் 4.30 மணிக்கு யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து பொலிகை பாரதி அணியும் மோதவுள்ளன.

வலிகாமம் உதைபந் தாட்ட லீக்கின் அனுமதி யுடன் தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக்கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட யாழின் நாயகன் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்று ஞாயிற்றுக்கிழமை சூப்பர் 12 லீக் சுற்றுக்கு தகுதி பெறுவதற்கான ஆட்டத்தில் பிற்பகல் 3.20 மணிக்கு நாவாந் துறை சென் மேரிஸ் அணியை எதிர்த்து வதிரி பொம்மேஸ் அணியும் பிற்பகல் 4.10 மணிக்கு நவிண்டில் கலைமதிஅணியை எதிர்த்து வல்வெட்டி ஒற்றுமை அணியும் பிற்பகல் 5 மணிக்கு ஆனைக் கோட்டை யூனியன் அணியை எதிர்த்து சமரபாகு நியூட்டன் அணியும் மோதவுள்ளன. (நி-90)

## அதிக...

அதன்காரணமாக இந்தியா போன்று ஒவ்வொரு மாகாணமும் ஏனைய மாகாணத்தின் பொருளாதாரத்துடன் போட்டியிடும்.இதனால் நன்மையேற்படும் பொருளாதாரம் போட்டித்தன்மை மிகுந்ததாக காணப்படும்.

மேலும் இந்த மாகாணங்கள் தங்களின் பொருளாதார சமூக அபிவிருத்தியை தேசிய கொள்கை கட்டமைப்பிற்குள் கையாளவேண்டும்.

இந்த அடிப்படையில் ஒருங்கியல் அதிகாரப்பட்டியலில் உள்ள அதிகாரங்களை அதில் அனேகமானவற்றை அல்லது தேவையானவற்றை வழங்க தயாராகவுள்ளோம்.

சில சிறுபான்மை குழுக்கள் செனெட்டிற்கான வேண்டுகோளை விடுத்துள்ளன என்னை பொறுத்தவரைக்கும் எங்களை பொறுத்தவரைக்கும் நாங்கள் அதனை எதிர்க்கமாட்டோம்.ஆனால் இதனை வெறுமனே அரசாங்கம் மாத்திரம் ஏற்றுக் கொள்ள முடியாது அனைத்து கட்சிகளும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.பாராளுமன்றத்தில் பல கட்சிகள் உள்ளன என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## இருவேறு...

இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார்சைக்கிளில் வந்த இனந் தெரியாத இருவரே துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அதேவேளை,

புத்தளம் - மஹகும்புக்கடவல, செம்புகுளிய பிரதேசத்தில் துப்பாக்கிச் சூடு ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

காயமடைந்த நபர் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

காணி தகராறு காரணமாக துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிவேக வீதிகளில் ஏற்படும் விபத்துகளுக்கு சாரதிகளின் கவனக்குறைவே காரணம்

## கவனம் செலுத்துமாறு பொலிஸார் அறிவுறுத்து


(கொழும்பு) அதிவேக வீதிகளில் பதிவாகும் விபத்துகளில் 80 வீதமானவை சாரதிகளின் கவனக்குறைவால் ஏற்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகனங்களை செலுத்தும் போது சாரதிகள் விசேட கவனம் செலுத்த வேண்டுமென பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர், சட்டத்தரணி நிஹால் தல்துவ குறிப்பிட்டார்.

அதிவேக வீதிகள் திறக்கப்பட்டதில் இருந்து இதுவரை 6,275 விபத்துகள் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

CJ PROMTERS & ரேனுகா பந்தல் நடாத்தும்

# CARNIVAL



(18953)

**இடம்: யாழ்.முற்றவெளி மைதானம்.**

**காலம்: February 13 தொடக்கம் 18 வரை**

கடைத்தொகுதிகளுக்கு, விளம்பரப்படுத்தல்களுக்கு, அனுசரணையாளர்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

(கடைகளுக்கான ஏலத் திகதி 12.02.2024 மாலை 6 மணிக்கு)

தொடர்புகளுக்கு:

**0772546511, 0775002840**

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு | தோற்றம் |
|---|---|---|
| 02.02.1958 | 11.02.2023 | 11.04.1962 |

அமரர்.நாகலிங்கம் செல்வதயாளரூபன்

அமரர்.செல்வதயாளரூபன் நாகராணி

ஆலமரங்களிரண்டு
அடியோடு சாய்ந்து
ஆண்டு ஒன்றாகிவிட்டது
ஆண்டாண்டு காலம்
அழுது புரண்டாலும்
மாண்டோர் வருவதில்லை
எம் மனதை விட்டு நீங்குவதுமில்லை
எம் மனதில் என்றும் நிலைத்திருப்பீர்கள்
அன்பின் அடையாளமாக

(18943)

குடும்பத்தினர்.

இல 52, 3ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

077 9672 409
075 9672 409

# இராசிபலன்

11.02.2024
தை 28, ஞாயிற்றுக்கிழமை
துதியை பின்னிரவு 1.17 மணிவரை
சதயம் முன்னிரவு 9.20 மணிவரை

சுபநேரம் -9.34-11.04 மணிவரை
இராகுகாலம்-5.04-6.34 மணிவரை

சந்திராஷ்டமம்
புநர்பூசம்,பூசம்.

வளவன்

**மேஷம்:** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்:** ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களைவிட்டு விலகலாம், பொறுமையால் பெருமைகாண வேண்டிய நாள்.

**துலாம்:** புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்:** சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**ரிஷபம்:** பிறர் உதவியுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**சிம்மம்:** புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், கனவுபலிதமுண்டு, குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** வழிபாட்டில் நம்பிக்கை வைப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கும்பம்:** மறக்க முடியாத இனிய சம்பவங்கள் நடைபெறும், வாய்ப்புண்டு, புதிய பொறுப்புக்கள் கூடும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்:** உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள்.

**கன்னி:** கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**தனுசு:** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்

**மீனம்:** உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.

உன்னைத்தவிர வேறுயாரும் உனக்கு அமைதி தர முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளில் மூழ்கியுள்ள நெல்லியடி பேருந்து நிலையம்


## மின் விளக்குகளை பொருத்தி தருமாறு கோரிக்கை

(நெல்லியடி)

நெல்லியடி பேருந்து நிலையம் அமைந்துள்ள பகுதி மின் விளக்குகள் இன்மையால் இருளில் மூழ்கியுள்ளது. இதனால் பயணிகள் அசௌகரியத்திற்குள்ளாகின்றனர்.

மின்விளக்குகளை பொருத்தித் தருமாறு பல தடவைகள் கோரியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இனியும் தாமதிக்காது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மின்விளக்குகளை பொருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-60)



கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலையின் சாதனை மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் பிரியாவிடை நிகழ்வும் கடந்த புதன்கிழமை பாடசாலை அதிபர் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவரும் லண்டனைச் சேர்ந்த பொறியியலாளருமான சு.சுபேசன் கலந்து சிறப்பித்திருந்தார். இதன்போது 2023ஆம் ஆண்டு இடம்பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பாடசாலையின் 23 மாணவர்களுக்கும் துவிச்சக்கரவண்டி வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (படம்: சுபேசன்)

## விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் நடத்தப்படும் பொறியியல் விஞ்ஞான சிறப்புமாணி 2023/2024 கற்கை நெறிக்கு விண்ணப்ப முடிவுத்திகதி நீடிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் இணையவழி ஊடாக (www.ou.ac.lk) அல்லது பிராந்திய அலுவலகம் ஊடாக விண்ணப்பிக்கலாமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களைப் பெற விரும்புபவர்கள் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்துடன் (021 222 3374 ) தொடர்பு கொள்ளுமாறு அவர் தெரிவித்தார். (நி)

## திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

ஆய்வு நிறுவன அலுவலக திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ்.இல.48, விதானையார் ஒழுங்கை, சுண்டிக்குளியில் இடம்பெறவுள்ளது. (நி-6)

# இரவு நேரங்களில் திருடப்படும் கால்நடைகள்

(கரணவாய்)

கரவெட்டி கிழக்கில் அண்மைக்காலமாக கால்நடைகள் திருட்டு போவது அதிகரித்துள்ளது. இதனால் கால்நடை வளர்ப்பாளர்கள் பாதிப்பிற்குள்ளாகி வருகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு ஒரு லட்சம் பெருமதியான ஆடு களவுபோயுள்ளது.

உரிமையாளர் பொலிஸில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-60)

## களவாடப்பட்ட துவிச்சக்கர வண்டி

(கரணவாய்)

நெல்லியடியில் பெண்பிள்ளைகள் பாவிக்கும் துவிச்சக்கர வண்டி களவாடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நெல்லியடி விக்னேஸ்வரா வீதியில் உள்ள கடை ஒன்றின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டியே இவ்வாறு களவாடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் துவிச்சக்கர வண்டி உரிமையாளர் நெல்லியடி பொலிஸில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார்.

நெல்லியடி நகர்ப்பகுதியில் வண்டிகளுக்கான பாதுகாப்பு நிலையம் இல்லாததால் மக்கள் கடைகளுக்கு முன்னால் நிறுத்துவதால் களவு போவதாக மக்கள் சுட்டிக்காட்டினர். (நி-60)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் குறுகியகால கற்கைநெறி பேச்சுமொழி ஆங்கிலம், கணனிக்கல்வி கற்கைநெறிகளிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் விண்ணப்பத்தினைப் பெற்று விண்ணப்பிக்கலாமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.


மேலதிக தகவல்களைப் பெற விரும்புபவர்கள் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்துடன் (021222 3374) தொடர்பு கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3038

### பிரணவன்





### றஜிதா




### வானதி




### சிவாந்தினி




### சாந்தன்




### பாலா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 427
Viber 076 636 3378





# சிறுபான்மையினரை அடக்குவதுதான் சுதந்திரமா?

**நீங்கள் சுதந்திர தினத்தைக் கொண்டாடுங்கள். அதில் எமக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை. ஆனால் இந்த சுதந்திர தினம் எமக்கானது இல்லை என பாதிக்கப்பட்ட சிறுபான்மையினர் மேற்கொள்ளும் அறவளியிலான ஆர்ப்பாட்டங்களை அடக்கி ஒடுக்குவது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல.**

ஆண்டான்-அடிமை எனும் சொற்பதம் காலணித்துவ ஆட்சியுடன் முடிந்துவிட்டதாய் எவரும் கருதி விட முடியாது.

அது இன்றுவரை உயிர்ப்புடன் இருந்து கொண்டுதான் இருக்கின்றது என்பதற்கு இந்த உலகில் பல உதாரணங்களைக் கூறி விடமுடியும்.

இங்கு அடிமை என்பதற்குள் இருக்கும் விளங்க முடியாத பொருளை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

அடிமை என்பதற்குள் சுதந்திர மறுப்பே உயர்ந்து நிற்கிறது.

சுதந்திர மறுப்பு காலணித்துவ ஆட்சியாளரின் நீட்சியாய் இன்றுவரை பாவப்பட்ட இனங்களில் திணிக்கப்படுகிறது என்பது தான் கசப்பான உண்மை.

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெற்றது.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 76 ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆயினும் சிறுபான்மைத் தமிழனத்தின் சுதந்திரம் காலில் நசுக்கப்படும் எறும்பாய் இருக்கிறது எனும் தொனிப்பொருளில் சுதந்திர தினத்தை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் அன்றையதினம் கிளிநொச்சியில் அரசுக்கு எதிராக பாரிய எதிர்ப்பார்ப்பாட்டம் ஒன்றிற்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ் அமைப்புகள் பல ஆதரவு தெரிவித்திருந்த நிலையில் கிளிநொச்சியில் சுதந்திரதின கரிநாள் மக்கள் பேரணி ஆரம்பமானது.

பாதுகாப்புத் தரப்பினரின் பலத்த எதிர்ப்பிற்கு மத்தியில் போராட்டம் நடந்த நிலையில் பேரணி ஏ-9 வீதி இரணைமடு சந்திக்கு அண்மையில் வந்த போது பொலிஸார் போராட்ட காரர்கள் மீது தாக்குதல் நடத்தத் தொடங்கினர். மக்களின் ஜனநாயக ரீதியிலான போராட்டத்தை கலைக்க பொலிஸார் தடியடி, கண்ணீர் புகைப்பிரயோகம், நீர்தாரைப் பிரயோகம் என்பவற்றை மேற்கொண்டமையினால் அவ்விடம் போர்க்களமாய் மாறியது.

எல்லை மீறிய பொலிஸாரின் அடாவடித்தனம் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான சி.சிறீதரன் மீது தாக்குதல் நடத்தப்பட்டது வரை நீண்டது.

சுதந்திர தின கரிநாள் போராட்டத்தை தடுத்தாக வேண்டும் என்பதில் மிகத் தெளிவாக இருந்த பாதுகாப்புத் தரப்பினர் அதற்கேற்றாற் போல் ஒழுங்குபடுத்தல்களைச் செய்து அடாவடித்தனம் புரிந்தமை தெளிவாய் புலப்படுகிறது.

தமக்கு வழக்கப்பட வேண்டிய சுதந்திரத்தை தரமறுக்கும் அரசுக்கு எதிராக அறவளியில் போராட, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிமையுண்டு. இதுவே உலக வழமை.

ஆனாலும் சிறுபான்மைத் தமிழினம் எந்த வழியிலும் போராடக்கூடாது என சிந்திப்பதற்குள் இருக்கும் ஆட்சியாளர்களின் அதிகாரப் போக்கை சர்வதேசம் புரிந்து கொள்ள வேண்டும்.

76 ஆவது சுதந்திர தின நிகழ்வில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டதாக செய்திகள் வெளிவந்திருந்தன.

தமிழினத்திற்கு நீதியில்லை. தமது உரிமைகளைக் கேட்டு அறவளியில் போராட அனுமதியில்லை. மீறி போரிட்டால் அராஜகத்தினூடாக அவர்களை அடக்கி ஒடுக்க முற்பவது எனின், சுதந்திர தின நிகழ்வில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படுவதால் பலன் ஏதும் உண்டோ? அவ்வாறாயின் யாரைத் திருப்திப்படுத்துவதற்காக அவ்வாறான செயற்றிட்டம் அரங்கேற்றப்பட்டது எனும் எண்ணம் எழுவதில் தவறேதும் இல்லையே.

குறித்த சுதந்திர தின நிகழ்வை இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய நாட்டு தூதுவர்களும் புறக்கணித்திருக்கிறார்கள் என்பதை இவ்விடத்தில் பதிவிட்டே ஆக வேண்டும்.

வடக்கு-கிழக்கில் இலங்கையின் 76 ஆவது சுதந்திரதினத்தை கரி நாளாக பிரகடனப்படுத்திய போராட்டங்கள் களேபரங்களில் முடிந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினரும் இன வாதத்தை கக்குவதில் முதலிடத்தில் இருப்பவருமான சரத்வீரசேகர ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தார்.

அதாவது யாழ்ப்பாணத்தில் தேசியக் கொடிகளை ஏந்தியவாறு தமிழ் மக்கள் சுதந்திர தினத்தைக் கொண்டாடிய இன்றைய நாளே உண்மையான சுதந்திர தினம் என்று அவர் தெரிவித்திருந்தார்.

சுதந்திர தினத்தை கரிநாளாய் பிரகடனப்படுத்தி மாணவர்கள், தமிழ் சிவில் அமைப்புகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து பாரிய எதிர்ப்பார்ப்பாட்டத்தை மேற்கொண்டதை கண்டு கொள்ளாத சரத்வீரசேகர யாழ்ப்பாண மக்கள் சுதந்திர தினத்தை கொண்டாடிய இன்றைய நாளே அவர்களுக்கான சுதந்திரதினம் எனத் தெரிவித்திருக்கிறார்.

சுதந்திரம் என்பது அனைவருக்கும் சமமானதாய் இருக்கும் போதே அது சுதந்திரமானதாய் இருக்கும்.

நாட்டில் வாழும் பேரின வாதத்திற்கு ஒரு மாதிரியும் சிறுபான்மை மக்களுக்கு வேறு ஒரு மாதிரியும் சுதந்திரம் இருக்கும் என்றால் அதன் பொருள் சுதந்திரம் அல்ல.

தவிர, நீங்கள் சுதந்திர தினத்தைக் கொண்டாடுங்கள் அதில் எமக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை ஆனால் இந்த சுதந்திரதினம் எமக்கானது இல்லை என பாதிக்கப்பட்ட சிறுபான்மையினர் மேற்கொள்ளும் அறவளியிலான ஆர்ப்பாட்டங்களை அடக்கி ஒடுக்குவது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல.

இதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்வார்கள் ஆயினும் அவர்களால் சிறுபான்மை இனத்திற்கான சுதந்திரத்தை ஒரு நாளும் தர முடியாது.

அந்தளவிற்கு இன-மத பாகுபாடு நிறைந்த சாக்கடையில் எமது நாட்டின் அரசியல் தளம் கட்டமைக்கப்பட்டு விட் டது என்பதுதான் வேதனை.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து வாத்தியார் வைத்திலிங்கம் எழுந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கல்வியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி அவர்கள் காலமாகி விட்டார் என்ற செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.

கல்வியியலாளராக, எழுத்தாளராக, நாடக ஆசிரியராக, நடிகராக, இசைக் கலைஞனாக பல்பரிமாண ஆளுமை மிக்க கலாநிதி கலாமணி அவர்களின் மறைவு எமது கல்விச் சமூகத்திற்குப் பேரிழப்பாகும்.

அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது.

அந்நேரம் பண்டிதர் பரமலிங்கம் ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருந்தார்.

இதனை அவதானித்த கங்காணி கார்த்திகேயன் என்ன பண்டிதர் ஐயா கடும் யோசனையில் இருக்கிறியள் என்ன சங்கதி?

**பண்டிதர்:-** தனிப்பட்ட யோசனை எதுவும் இல்லை. ஆனால் எங்கட இனம் எண்டு சிந்திக்கும் போது தான் துன்பம் வாட்டுது.

**கங்காணி:-** என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள். எதையும் கொஞ்சம் தெளிவாகச் சொன்னால் தானே விளங்கும்.

**பண்டிதர்:-** நேற்று முன்தினம் (09) யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் இந்தியப் பாடகர் ஹரிகரனின் இசைக் கச்சேரி நடைபெற்றதல்லோ. இந்திய நடிகர்கள் ரம்பா, தமன்னா , யோகி பாபு மற்றும் கலாமாஸ்டர் ஆகியோரும் இந்த மாபெரும் இசை நிகழ்வில பங்கேற்றினம்.

ஏகப்பட்டவர்கள் அந்த நிகழ்வைப் பார்க்க வந்திருந்தினம்.

யாழ்ப்பாணத்து வீதிகள் எங்கும் வாகனங்களாலும் மோட்டார் சைக்கிள்களாலும் நிறைந்திருந்தது.

ஆனால் எங்களில சிலர் மிகமோசமாக நடந்து கொண்டினம்.

மதுபோதையில் நின்ற ஒரு தரப்பு இளம் மட்டம், பெரும் அட்டகாசம் செய்தது.

முற்றவெளி மைதானத்தைச் சுற்றி அமைந்திருந்த தகர வேலிகளை எல்லாம் உடைத்தெறிந்து ஓ! என்ற சத்தத்தோட ஒரு கூட்டம் முற்றவெளி மைதானத்திற்குள்ள ஓடிப் போச்சுது.

அது தவிர, இன்னும் சில இளைஞர்கள் லைட் பூட்டியிருந்த கம்பங்களில ஏறிச்சினம். இன்னும் சிலர் பனை மரத்தில ஏறிக்கொண்டினம். அறிவிப்பாளர்கள் பிளீஸ் ஏறாதீங்க, இறங்குங்க என்று ஒலி வாங்கியில கெஞ்சிக்கேட்டினம்.

அதில ஒரு அறிவிப்பாளர்; நாங்கள் எத்தனையோ நாடுகளுக்கு பல நிகழ்ச்சிகள் செய்வதற்குப் போயிருக்கிறம்.

ஆனால் இப்படியான ஒரு குழப்பத்தை ஒரு இடத்திலும் நாங்கள் காணவில்லை என மன வேதனையோட கூறினார்.

இந்த நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர் நடிகை ரம்பாவின் கணவர், எங்கட மானிப்பாயைச் சொந்த இடமாகக் கொண்டவர்.

அவரும் மேடை ஏறி, அன்புக்குரிய தமிழ் உறவுகளே! இந்த நிகழ்ச்சி ஒழுங்காக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்குங்கள். ஏகப்பட்ட செலவுகளைச் செய்து தான் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கிறம்.

இங்கு பிரபலமான கலைஞர்கள் வந்திருக்கிறார்கள். ஆகையால குழப்பம் செய்யாமல் இந்த இசை நிகழ்ச்சி நடந்தேற உதவுங்கள் எனக் கேட்டார்.

அது மட்டுமல்ல. யாழ்ப்பாணப் பொலிஸ் அதிகாரி ஒருவரும் மேடை ஏறி; ஒலி வாங்கியில் அமைதியைக் காக்குமாறு கேட்டுக் கொண்டார். ஆனால் குழப்பம் செய்கிற ஒரு கூட்டம் அடங்கவே இல்லை.

இவ்வாறு ஒரு தரப்பு மிக மோசமாக நடந்து கொண்டதால இந்தியக் கலைஞர்கள் பயந்து போனதோட, நாங்கள் நினைத்திருந்த யாழ்ப்பாணமா இது என ஏங்கிப் போய்விட்டினம்.

**விதானையார்:-** பண்டிதர் ஐயா சொன்ன அவ்வளவும் உண்மை. யாழ்ப்பாணத்தில நடந்த மேற்படி இசை நிகழ்ச்சி இன்றைய சூழ்நிலையில தேவையா? இல்லையா? என்ற வாதம் ஒரு புறம் இருக்க, எங்கட யாழ்ப்பாணத்தின்ர பண்பாடு, பழக்க வழக்கம், இசையை ரசிக்கின்ற பாங்கு என எல்லாமும் ஒரு கணப்பொழுதில கேவலப்பட்டுப் போயிட்டுது.

அதோட யாழ்ப்பாணம் என்றால் இது தான் என்பதான கருத்துநிலையும் அந்த நிகழ்வில கலந்து கொண்டவர்களின்ர மனதில பதிவாயிற்று.

**மூப்பர்:-** ஏன் விதானையார் இப்படியான இசை நிகழ்ச்சி எண்டால், குறித்த இடங்களில அதிகளவு பொலிஸாரைப் பணியில ஈடுபடுத்தலாம் தானே.

**விதானையார்:-** பொலிஸாரின்ர நோக்கம் எல்லாம் யாழ்ப்பாணத்தாரின்ர மானம் கப்பல் ஏற வேணும் எண்டது தானே!

யாழ்ப்பாணத்தாற்ற மானம் கப்பல் ஏறினால், அது ஒட்டு மொத்த ஈழத் தமிழ் மக்களையும் பிரதிநிதித்துவம் செய்வதாக இருக்குமல்லோ.

அதால அவர்களும் இப்படியான நிகழ்ச்சிகள் நடக்கும் போது ஒதுங்கிக் கொள்ளுவினம்.அது தான் நேற்று முன்தினமும் நடந்தது.

**சிறாப்பர்:-** பொலிஸார் ஒதுங்கிக் கொள்வது ஒரு புறம் இருக்க, எங்களுக்கு ஒரு மதி வேண்டாமோ.


யாழ்ப்பாண முற்றவெளியில ஒரு பெரும் இசை நிகழ்ச்சி நடக்குதெண்டால், அதில கலந்து கொள்ளும் போது எவ்வளவு பௌவ்யமாக நடந்து கொள்ள வேணும்.

இதைவிடுத்து முற்றவெளியில இசை நிகழ்ச்சி எண்டால், அது சிலருக்கு தீபா வளி. இன்னும் சிலருக்குப் பெருநாள் எண்ட மாதிரியல்லோ இருக்குது.

**சாத்திரியார்:-** எது எப்படி இருந்தாலும் பொது இடங்களில எப்படி நடந்து கொள்ள வேணும் என்பது பற்றி சிறுவர்களுக்கு, மாணவர்களுக்கு எடுத்துக் கூறி அவர்களை ஒழுங்குபடுத்தினால் தான், அவர்கள் வளர்ந்து இளைஞர்களாக வரும் போது, பொது இடங்களில கௌரவமாக நடந்து கொள்ளுவினம்.

அவர்கள் கௌரவமாக நடந்து கொள்ளும் போது அது எங்கட ஈழத் தமிழினத்தின் கௌரவத்தையும் பாதுகாக்கும்.

இவ்வாறு சாத்திரியார் சதாசிவம் கூற, அதனைத் தானும் வரவேற்பது போல ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## முற்றவெளியில் கப்பல் ஏறிய யாழ்ப்பாணத்தாரின் மானம்

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சரணடைந்தவர்களைக் கொன்று விட்டு இப்போது சுத்துமாத்து விடு பவர்களை என்ன செய்ய வியாசரே?

**திகான் வடமராட்சி**

**உதவி செய்வதா, உணர்வுகளை மதிப்பதா, நிரந்தர தீர்வுக்கு வழி வகுக்கும்?**

தாயை அடகு வைத்து தன் பசி தீர்ப் பவன் எப்படிப்பட்ட மகனாக இருப்பான் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.
உள்ளங்கை கொடுப்பது புறங்கைக் குத் தெரியக் கூடாது என்பதே மனித நேயம்.
ஆனால் இன்று தம்மைப் பெரியவர்கள் எனக் கூறும் பலர் மனித நேயம் என்று கூறிக்கொண்டு அதைக் குழிதோண்டிப் புதைக்கிறார்கள்.
அண்மையில் ஒரு காணொளி பார்த் தேன். கணவனை இழந்து தனது 18 வயது மகளுடன் வாழ்ந்து வந்த தாய் இறந்து விட அவருக்கு உதவி செய்ய வந்த ஒருவர் நடு வீட்டில் பிரேதம் கிடக்க அதற்கு முன் நின்று அந்தச் சிறுமியைப் பேட்டி எடுத்து அதன்பின் தான் ஏதோ பண உதவி செய்ய வந்ததாய் கூறி பெருமை பேசுகிறார். அட நாசமறுப்பாரே இதுவா உமது மனித நேயம்.

**சிவயோகன் புளியங்குளம்**

**இயற்றப்படும் சட்டங்கள் அரசாங் கத்தின் பாதுகாப்பிற்கா? மக்களின் பாதுகாப்பிற்கா வியாசரே?**

அரசாங்கத்தின் பாதுகாப்புக்கானதாய் இருக்கும் போது மக்களுக்கானதாய் கூறப்படும்.
மக்களுக்கானதாய் இருக்கும் போது அரசாங்கத்தைப் பாதுகாக்கக் கூடிய தாய் இயற்றப்படும்.
என்ன தம்பி குழப்பமாய் இருக்கிறதா? எனக்கும் அப்படித்தான்.

**மதுவன் மீசாலை**

**நரிக் கூட்டமும் காகக் கூட்டமும் ஒன்று சேர்ந்தால் எப்படியிருக்கும் வியாசரே?**

நரிக்கூட்டமும் காகக்கூட்டமும் ஒரு நாளும் ஒன்று சேராது தம்பி.
நரிகள் எலும்பு சூப்பிகள். அதற்கு சுயமாக வேட்டையாடத் தெரியாது. யாரும் வேட்டை யாடி உண்ட எச்சியைக் கடித்து புசித்து ருசிக்கும்.
ஆனால் காகங்கள் அவ்வாறு இல்லை. அவற்றிடம் யாரிடமும் இல்லாத ஒற்றுமை மேலாக இருக்கிறது.
தன் இனம் என்ற பற்று இருக்கிறது. தன் இனத்துக்கு ஒன்றென்றால் ஒன்று கூடும் துணிவு இருக்கிறது.
தயவு செய்து காகங்களை நரிகளுடன் ஒப்பிடாதீர்கள்.





அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
**076 097 3126**
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**சுதன் குப்பிழான்**

**சரணடைந்தவர்களைக் கொன்று விட்டு இப்போது சுத்துமாத்து விடுபவர்களை என்ன செய்ய வியாசரே?**

விஜய் நடித்த தெறி படத்தில் ஒரு பெண்ணை பாலியல் துஷ்பிரயோ கம் செய்து கொன்ற குற்றவாளி சட்டத் தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி தப் பித்து விடுவான் என ஆதங்கப்படு வார் மொட்டை ராஜேந்திரன்.
அதற்கு “அவன் உன் கையில் கிடை த்தால் என்ன செய்வாய்?” என விஜய் கேட்பார்.
“அவனைப் பிடித்து மூஞ்சை, முகறை எல்லாம் உடைத்து அவன் கழுத்தை திருகி, துடிக்கத் துடிக்க கொன்று இந்தப் பாலத்துக்கு அடியில் கட்டித் தொங்க விடுவேன்” என்பார் மொட்டை ராஜேந்திரன்.
அதற்கு விஜய் பாலத்துக்குக் கீழ் பார்க்கும்படி கூறுவார். விஜய் கூறி யது போலவே அந்தக் குற்றவாளி கட்டித் தொங்கவிடப்பட்டிருப்பான்.
**என்ன சுதன், என்ன செய்ய வேண் டும் என்று புரிகிறதா?**



நரிக் கூட்டமும் காகக் கூட்டமும் ஒன்று சேர்ந்தால் எப்படியிருக்கும் வியாசரே?

**டனுஷாந்ராசா திருநெல்வேலி**

**இலங்கையில் சுதந்திர தினம் கொண்டாப்படுகிறது. ஆனால் தமி ழினத்துக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லையே வியாசரே?**

சுதந்திரம் என்பது கேட்டுப் பெற வேண்டியது இல்லை. அது மறுக்கப் படும் போது தட்டிக்கேட்க வேண்டியது பாதி க்கப்பட்ட இனத்தின் தார்மீக கடமை.
அவ்வாறு கேட்காமல் விட்டால் அந்த இனம் தன் இருப்பை அடகு வைத்து விட்டது என்றே பொருள்.
மயிலே மயிலே இறகு போடு என்று கெஞ்சினால் அது போடாது. அதைப் பிடித்து வைத்து புடுங்க வேண்டிய விதத்தில் புடுங்கினால்தான் மயிலிறகு கிடைக்கும்.
மயிலிறகுக்கும் தமிழரின் சுதந்திரத் திற்கும் ஒற்றுமை உண்டல்லவா?

**பிரபா அத்தியடி**

**பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மாவீரர்களை நினைவு கூர்ந்தது அரசமைப்பை மீறும் செயல் என்கி றாரே சரத் வீரசேகர?**

எங்கள் ஊர் மிகப் பின்தங்கிய ஒரு கிராமம்.
அங்கு அடர்ந்த காடுகள் நிறைந்திருக் கும். அந்தக் காட்டில் இரவு வேளைகளில் தினமும் நரிகள் ஊளையிடும்.
அதைப் பற்றி நாம் கருத்தில் எடுப்ப தில்லை. அவை ஊளையிட்டு களை த்துப்போய் படுத்துவிடும். ஆனால் மீண் டும் அடுத்தநாள் இரவு ஊளையிடத் தொடங்கிவிடும்.
அதுசரி பிரபா உங்கள் கேள்வி எனக் குப் புரியவில்லை. மறுபடி ஒரு முறை கேட்க முடியுமா?

**கனேஸ் பருத்தித்துறை**

**ராஜிவ்காந்தி கொலை வழக்கில் கைதான சாந்தன் விடுதலை தொடர் பில்...?**

தூக்குத் தண்டனை என்பது ஒரு நிமிட த்தில் முடிந்துவிடக் கூடியது. அதன் வலி யும் சிறிய கணப்பொழுதே.
ஆனால் 30 வருடங்களுக்கு மேல் சிறை யில் இருப்பதென்பது மிகக் கொடுமை யானது.
அந்த வலியை சொல்லிப் புரிய வைத் துவிட முடியாது.
சாந்தன் தனது தாயகத்திற்கு வருவதே அவருக்கு உண்மையான சுதந்திரமாக இருக்கும்.
அதற்கு உதவி புரியும் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

**படம் : படித்தால் மட்டும் போதுமா**
**இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்**
**பாடியவர் : டி.எம்.சௌந்தரராஜன்**
**பாடலாசிரியர்: கண்ணதாசன்**



நீங்கள் அத்தனைபேரும் உத்தமர்தானா சொல்லுங்கள்
உங்கள் ஆசை நெஞ்சைத் தொட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்

நீங்கள் அத்தனைபேரும்...

வேற வேற உள்ளவனெல்லாம் நல்லவனாவான்
இல்லாதவனே பொல்லாதவனாம் பூமியிலே
பின்னே நன்மை தீமை என்பது என்ன
பாவபுண்ணியம் என்பது என்ன பாதையிலே

நீங்கள் அத்தனைபேரும்...

ஆண்டவனை வேண்டுகிறேன் நான் ஹரே ராம் ஹரே ராம் ராம்
வேண்டியதைத் தேடுகிறேன் நான் ஹரே ராம் ஹரே ராம் ராம்

ஆண்டவனை வேண்டுகிறேன் நான்....

திருநீறு பூசிக்கொண்டு தேவாரம் பாடு
பணங்காசு சொந்தமில்லை பகவானை நாடு
கையோடு கொண்டு வந்த பொருள் என்ன கூறு
கடை நாளில் வாராது கையிலுள்ள ஓடு

எடுத்தவனுக்கு எண்ணம் நூறு
கொடுத்தவனுக்கு எண்ணம் கோடி நாளெல்லாம்
போதும் போதும் என்பவனில்லை
வேண்டும் வேண்டும் என்பவன்தானே ஊரெல்லாம்

நீங்கள் அத்தனைபேரும்...

அல்லாவின் ஆசி உண்டு எல்லோரும் வாழ்க
எல்லோர்க்கும் செல்வம் தரும் அல்லாவே வாழ்க
அல்லாவின் ஆசி உண்டு எல்லோரும் வாழ்க
எல்லோர்க்கும் செல்வம் தரும் அல்லாவே வாழ்க
நெருப்பின்றி புகையாது புகையே நீ வாழ்க
நீயின்றி நானில்லை நீ கூட வாழ்க

எல்லாம் அவனே என்பது வேதம்
எங்கும் அவனே என்றொரு பாடம் படியுங்கள்
கடையும் அவனால் வந்ததுதானே
உடையும் அவனே தந்ததுதானே பிடியுங்கள்

நீங்கள் அத்தனைபேரும்..

ஆண்டவனை வேண்டுகிறேன் நான் அல்லா அல்லா ஹும்
வேண்டியதைத் தேடுகிறேன் நான் அல்லா அல்லா ஹும்

ஆண்டவனை வேண்டுகிறேன் ..

செலவாகும் என்றுதானே செல்வம் என்றாரோ
செல்வம் என்றாரோ
தங்காது என்றுதானே தங்கம் என்றாரோ
தங்கம் என்றாரோ
பொண்ணாகப் பிறந்தவர்க்கு பிள்ளை உண்டாகும்
பொன் ஒன்று நீங்கள் தந்தால் ஒன்று ரெண்டாகும்

விதையைப் போடு செடியைப் பாரு
விளையும் பொருளை நாளை பாரு பாரம்மா
போடப் போட முளைக்கும் பாரு
பொறுமை வேண்டும் மெதுவாய் பாரு பொன்னம்மா

நீங்கள் அத்தனைபேரும்..

வேற வேற உள்ளவனெல்லாம் நல்லவனாவான்
இல்லாதவனே பொல்லாதவனாம் பூமியிலே
பின்னே நன்மை தீமை என்பது என்ன
பாவபுண்ணியம் என்பது என்ன பாதையிலே

நீங்கள் அத்தனைபேரும்..

# மீண்டெழும் வெஸ்ட் இண்டீஸ்!

அயர்ச்சியில் உழல வைக்கும் அன்றாடத்திலிருந்து வேகமெடுப்பதற்கான உத்வேகத்தை விளையாட்டுப் போட்டிகள் எப்போதுமே கொடுத்துக்கொண்டிருக்கின்றன. சமீபத்தில் வெஸ்ட் இண்டீஸ் அணிக்காக அறிமுகமாகி அந்த அணிக்கு மறக்க முடியாத வரலாற்று வெற்றியைப் பெற்றுக் கொடுத்திருக்கும் சமார் ஜோசப்பின் கதை கிரிக்கெட் உலக ஆச்சரியம்!

24 வயது இளைஞனான சாமர் ஜோசப் ஏழ்மையான பின்னணியைக் கொண்டவர்... செக்யூரிட்டியாக வேலை பார்த்தவர். இன்றைக்கு அவரால்தான் 27 ஆண்டுகளுக்குப் பிறகு, அவுஸ்திரேலியாவில் வெஸ்ட் இண்டீஸ் அணி ஒரு டெஸ்ட் போட்டியை வென்றிருக்கிறது.

வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட்டின் வரலாறே அடக்குமுறையாலும் போராட்டத்தாலும் நிறைந்தது. இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாட்டு வீரர்கள் தங்களை சரிக்கு சமமாக மதிக்காமல் காலனிய நாடாகவே பார்த்த வெறிதான் வெஸ்ட் இண்டீஸை தொடர்ந்து 2 உலகக் கிண்ணங்களை வெல்ல வைத்தது.

வெஸ்ட் இண்டீஸிற்கு கிரிக்கெட் ஒரு விடுதலை. தங்கள்மீது கட்டப்பட்டிருக்கும் அடக்குமுறைச் சங்கிலிகள் அத்தனையையும் அறுத்து எறிவதற்கான மாபெரும் கருவி அது. அமெரிக்காவில் ஜார்ஜ் ஃப்ளாய்டு கொல்லப்பட்டு உலகம் முழுவதும் BlackLivesMatter இயக்கம் வேகமெடுத்த போது, கிரிக்கெட் உலகிலிருந்து முதல் ஆதரவு குரல் வெஸ்ட் இண்டீஸ் வீரர்களிடமிருந்துதான்.

போட்டியின் நடுவேயே மைக்கேல் ஹோல்டிங் தான் எதிர்கொண்ட அடக்குமுறைகளைப் பட்டியலிட்டு கண்ணீர் சிந்திய சம்பவம் பலரின் மனசாட்சியையும் உலுக்கியது. அந்தச் சம்பவம் நடந்த சமயத்தில் வெஸ்ட் இண்டீஸ் அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் செய்திருந்தது. நிறவெறிக்கு எதிராக அத்தனை வீரர்களும் முட்டி போட்டு உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும் என்கிற விடயமே வெஸ்ட் இண்டீஸ் வீரர்களின் உறுதியால் மட்டுமே சாத்தியப்பட்டது. முட்டி போட்டு நிறவெறிக்கு எதிராக உறுதிமொழி எடுத்துவிட்டு, இங்கிலாந்துக்கு எதிரான முதல் போட்டியையே வெஸ்ட் இண்டீஸ் அணிதான் வென்றது. அந்த வெற்றியின் மூலம் "இங்கு யாரும் யாருக்கும் கீழானவர்கள் இல்லை எல்லாருமே சமம்தான்" என்கிற செய்தியை உலகிற்கு உரக்கச் சொன்னது, வெஸ்ட் இண்டீஸ் அணி!

கிரிக்கெட் உலகில் வெஸ்ட் இண்டீஸ் அணி எப்போதெல்லாம் மட்டுப்படுத்தப்படுகிறதோ அப்போதெல்லாம் இன்னும் எங்களின் போராட்டம் ஓய்ந்துவிடவில்லை என்பதை உணர்த்தும் வகையில் வெஸ்ட் இண்டீஸ் அணி ஒரு வெற்றியைப் பெற்றுக் காட்டும்.

தற்போது அவுஸ்திரேலியாவிற்கு வெஸ்ட் இண்டீஸ் அணி சென்ற போதுமே கூட பெரிய எதிர்பார்ப்பு இல்லை. முதல் டெஸ்ட் போட்டியில் எதிர்பார்த்ததைப் போல தோற்றும் போனார்கள்.

இந்தச் சமயத்தில்தான் அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் ராட்னி ஹாக் வெஸ்ட் இண்டீஸ் குறித்து ஒரு விமர்சனத்தை முன் வைத்தார். அதாவது வெஸ்ட் இண்டீஸ் அணியினர் முழுமையாக ஒருவித பதற்றத்துடன் இருக்கின்றனர். அவர்களுக்கு நம்பிக்கையே இல்லை. அவர்கள் மீண்டும் இங்கு வருவார்களா என்றே தெரியவில்லை என ராட்னி ஹாக் கூறியிருந்தார். இந்த விமர்சனம் வெஸ்ட் இண்டீஸ் அணியை உசுப்பேற்றி விட்டது. மீண்டும் தங்களை நிரூபித்துக் காட்டியே ஆக வேண்டும் என்கிற நெருப்பு அவர்களுக்குள் பற்றிக்கொண்டது. இரண்டாவது டெஸ்ட் போட் டியை 8 ரன்கள் வித்தியாசத்தில் வெஸ்ட் இண்டீஸ் அணி வென்று காட்டியது.


இரண்டே வார்த்தைகள்தான் எங்களை ஊக்கப்படுத்தியது. ராட்னி ஹாக் நாங்கள் பதற்ற மாக இருப்பதாகவும் நம்பிக்கையிழந்து இருப்ப தாகவும் கூறியிருந்தார். நாங்கள் அப்படியில்லை என்பதை இந்த உலகத்திற்குக் காட்ட விரும் பினோம். உங்களை வீழ்த்த இந்தப் புஜபலம் போதுமா? (கையை மடக்கிக் காட்டி) என வெஸ்ட் இண்டீஸ் அணியின் கப்டன் ப்ராத்வேட் வெற் றிக்குப் பிறகு பேசினார்.

வெஸ்ட் இண்டீஸ் அணி வென்றதற்கு மிக முக்கிய காரணம் சமார் ஜோசப்தான். சேஸ் செய்த அவுஸ்திரேலியா அணியின் முதுகெலும்பை மொத்தமாக முறித்துப் போட்டார் சமார் ஜோசப். மொத்தமாக 7 விக்கெட்டுகளை வீழ்த்தினார். அவுஸ்திரேலிய அணி மொத்தமாக காலி. இதற்கு முந்தைய நாள்தான் ஸ்டார்க் வீசிய ஒரு யார்க்கர் சமார் ஜோசப்பின் காலைப் பதம் பார்த்திருந்தது. தொடர்ந்து ஆட முடியாமல் நொண்டியபடியே பெவிலியனுக்கு தடுமாறிச் சென்றிருந்தார். வலியோடு மறுநாள் மீண்டு வந்து தொடர்ச்சியாக ஓவர்களை வீசி அவுஸ்திரேலிய அணியை நடுநடுங்க வைத்தார்.

போட்டி காபாவில் நடந்தது. காபா எப்போதுமே அவுஸ்திரேலியாவின் கோட்டை. அப்படி ஒரு மைதானத்தில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது வெஸ்ட் இண்டீஸின் மறு எழுச்சியாகவே பார்க்கப்படுகிறது. கமெண்ட்ரியிலிருந்த ப்ரையன் லாரா கண்ணீர் மல்க எழுந்து நின்று கைதட்டினார்.

என்ன ஆனாலும் அவுஸ்திரேலியாவின் கடைசி விக்கெட்டை வீழ்த்தும் வரை ஓவர் கொடுங்கள் என கப்டனிடம் வலியோடு பந்தைக் கேட்டு வாங்கினார் சமார் ஜோசப். இப்படியான எழுச்சிமிகு வீரர்கள் இருக்கும் வரை வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட்டுக்கு அஸ்தமனமே இல்லை. இது வெறும் ஆரம்பம்தான் என்கிறார் கப்டன் ப்ராத்வேட்.

**அந்த வெற்றியின் மூலம் "இங்கு யாரும் யாருக்கும் கீழான வர்கள் இல்லை எல்லாருமே சமம்தான்" என்கிற செய்தியை உலகிற்கு உரக்கச் சொன்னது, வெஸ்ட் இண்டீஸ் அணி!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முற்றிலும் அழியும்! அனுமானிக்கும் அனுமோகன்

***கிழக்கில் வங்கான விரிகுடா பொங்கும் போது, மேற்கே இருக்கும் அரபிக்கடல் பகுதி உள்வாங் கும். முக்கடலும் சங்க மிக்கும் இடத்தில் மூன்று கடலும் பொங்கும். அப்போது ராவண பூமி எனப்படும் இலங்கை கடலில் மூழ்கும் என்கிறார் சித்தர்.***

தமிழ்த் திரையுலகில் இயக்குநராக அறிமுகமாகித் தொடர்ந்து நடிகராகவும் இயங்கிவருபவர் அனுமோகன்.

இது ஒரு தொடர் கதை, நினைவு சின்னம், மேட்டுப்பட்டி மிராசு, அண்ணன் ஆகிய படங்களை இயக்கியுள்ள இவர், அர்ச்சனை பூக்கள், விஜபி, நட்புக்காக, மன்னவரு சின்னவரு, படையப்பா, சுயம்வரம், மின்சார கண்ணா போன்ற பல படங்களில் நடித்துள்ளார். இவரின் கொங்குத் தமிழ் அனைவரையும் ரசிக்க வைக்கும்.

சமீபகாலமாக அனுமோகன் மக்களுக்கு இயற்கை குறித்தும் பஞ்ச பூதங்கள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் என்று பேசி பல்வேறுவிதமான தீர்க்க தரிசனங்களையும் சொல்லி வருகிறார். அதன்படி சென்னை உள்ளிட்ட கடற்கரை நகரங்களுக்குள் கடல்நீர் புகும். இதனால் பேரழிவு ஏற்படும். சென்னை தேனாம்பேட்டை வரை கடல் நீர் உள்ளே வந்துவிடும். அரபிக்கடல் பகுதிகளில் பல நிலங்களாக மாறும் என்று அதிர்ச்சியூட்டும் கருத்துகளைத் தெரிவித்துவருகிறார். இதுகுறித்து அனுமோக னுடன் பேசினோம்.

"கடந்த சில மாதங்களாக ஒரு சித்தர் என் கனவில் வருகிறார். இதற்கு முன்பு அவரை நான் நேரில் பார்த்ததில்லை. ஆனால் அவர் என் பால்யத்தில் நான் படித்த சித்தர் சுவடிகளை எனக்கு நினைவூட்டினார். அந்தச் சுவடியில் 2024 ஆம் ஆண்டுக்குப் பின் உலகில் ஏற்படப் போகும் பேரழிவுகள் குறித்துச் சொல்லப்பட்டிருந்தன. எனக்கு 20 வயதிருக்கும்போது அந்தச் சுவடிகளைப் படித்தேன். அதன்பின் அவற்றை மறந்துவிட்டேன். இப்போது சித்தர் அந்தச் சுவடியில் படித்த செய்திகளை வரிவரியாக நினைவூட்டிவிட்டார். பின்பு, "இவற்றை எல்லாம் தற்போது மக்களுக்குச் சொல்" என்கிறார்.

மக்கள் மனித நேயம், ஒழுக்கம் ஆகியவற்றை மறந்து நடக்கும்போது பஞ்ச பூதங்கள் அதற்கான தண்டனையைக் கொடுக்கும். என்கிறார். இதனால் பஞ்சபூதங்கள் தம் கோபத்தை வெளிப்படுத்தும். இதனால் உலகம் எங்கும் எரிமலை வெடிப்பு, நிலநடுக்கம், சுனாமி, கடல் நீர் கொந்தளிப்பு ஆகியன ஏற்படும். நிலம் நீரால் சூழப்படும். நீர் இருந்த கடற்பகுதிகள் வற்றி நிலமாக மாறும்.

2024ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்குள் உலக அளவில் பெரும் இயற்கைச் சீற்றங்கள் நிகழும். பஞ்ச பூதங்கள் இணைந்து இதை நிகழ்த்தும். கிழக்கில் வங்காள விரிகுடா பொங்கும்போது, மேற்கே இருக்கும் அரபிக்கடல் பகுதி உள்வாங்கும். முக்கடலும் சங்கமிக்கும் இடத்தில் மூன்று கடலும் பொங்கும். அப்போது ராவண பூமி எனப்படும் இலங்கை கடலில் மூழ்கும் என்கிறார் சித்தர். தென் தமிழகத்திலும் பேரழிவுக்கு வாய்ப்புண்டு.

இவற்றை எல்லாம் எடுத்துச் சொல்லச் சொல்லி சித்தர்கள் என்னிடம் வலியுறுத்திக்கொண்டே இருக்கிறார். இது தேவையின்றி மக்களை பயமுறுத்துவதற்காக அல்ல. விழிப்புணர்வு ஏற்படவே இவற்றைச் சொல்கிறேன். நடந்தபின்பு வருந்துவதைவிட நடக்கும் முன்பு விழிப்புணர்வு பெற்று அதிலிருந்து தப்ப வழி தேட வேண்டும். இயற்கை நம்மை விட வலிமையானது என்று உணர்ந்து அதற்கு எதிரான செயல்களைக் கைவிட வேண்டும்" என்கிறார் அனுமோகன்.



# உங்கள் முன்னேற்றத்தை யாராலும் தடுக்க முடியாது!

"நீங்கள் நிஜமாகவே,நிஜமாகவே,நிஜமாகவே உங்கள் வாழ்க்கையில் எதை சாதிக்கவேண்டும் என்று நினைக்கிறீர்கள்? அது என்ன... இத்தனை நிஜமாகவே என்கிறீர்களா ? சரியான இலக்கை நிர்ணயித்தால் மட்டுமே உங்களுடைய முழு மனதையும் அதில் செலுத்தி எவ்வளவு நாளானாலும் அயராமல் உழைத்து வெற்றி அடையும் முயற்சியை நீங்கள் செய்வீர்கள். அதற்கு ஊக்கமும் உந்துதலும் தேவை. எந்த இலக்குக்காக எப்படிப்பட்ட வெற்றியை அடைவதற்காக ஊக்கம், உந்துதல் ஆகிய இரண்டும் தேவை என்பதில் உங்களுக்குத் தெளிவு வேண்டும்.

"மோட்டிவேஷனில் இரண்டு வகை உண்டு. ஒன்று, உண்மையான மோட்டிவேஷன் மற்றொன்று பொய்யான மோட்டிவேஷன். அது என்ன பொய்யான மோட்டிவேஷன் என்கிறீர்களா?

நீங்கள் செய்ய நினைப்பவற்றை எப்படிச் செய்ய வேண்டும் என்று சொல்லித் தருவது பொய்யான மோட்டிவேஷன். இதை வெற்றி பெற்ற பலரும் மற்றவர்களுக்குச் சொல்லித் தந்து கொண்டிருக்கின்றனர். 'உன்னால் முடியாத விடயமே இந்த உலகத்தில் இல்லை' என்கிற படிப்பினையை சொல்லித் தரும் வகையிலானது இது. இது நிஜ உலகில் சாத்தியமான ஒன்றில்லை.



உண்மையான மோட்டிவேஷன் என்பதை உணர முதலில் நாம் செய்ய நினைக்கும் விடயத்துக்கான நம் தகுதியை உயர்த்திக் கொள்வது ஆகும். இப்படி உயர்த்திக் கொள்வதன் மூலம் வேகமாக நீங்கள் நினைக்கும் இடத்தை நோக்கிப் பயணிக்க முடியும். இதுதான் மனிதர்களை மோட்டிவேட் செய்யும். ஏனென்றால், ஒரு விடயம் குறித்த திறனையும் தகுதியையும் ஒருவர் உயர்த்திக் கொள்ளும்போது அவர் நினைக்கும் காரியத்தை சுலபமாக முடிக்க முடியும் என்ற நம்பிக்கையைப் பெறுவார். அதுவே வெற்றிக்கு வழிவகுக்கும். இதனால்தான், நிஜமான மோட்டிவேஷன் என்பது ஒருவர் நாம் வளர்த்துக்கொண்டிருக்கும் தகுதிகளை வைத்து இதை நிச்சயம் வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியும் என்று மனதார உணர்வதேயாகும்

இந்த உலகத்தில் திறமை, அறிவு மற்றும் தேவையான படிப்பு இருந்தால். ஒருவர் நிச்சயமாக வெற்றி பெற்றுவிடலாம் என்கிற ஒரு நம்பிக்கை இருக்கிறது. இதனாலேயே 'நன்றாகப் படிக்காவிட்டால் வெற்றி பெற முடியாது வாழ்க்கையில் கஷ்டப்பட வேண்டி இருக்கும்' என்று மிரட்டி மிரட்டியே நம்மை நம் பெற்றோர்கள் வளர்க்கின்றனர். இந்த மிரட்டல் இளம் வயது மாணவர்கள் சரிவர படிப்பதற்காக விடப்படும் மிரட்டல்களே.

"நம் இயல்பான திறனை அறிந்துகொண்டு அதை வெளிக்கொணர்வது எப்படி? இதற்குத் தான் 'நான்' எனும் கோட்பாடு உதவும். நான் எனும் கோட்பாடு என்பது என்ன..? நீங்கள் உங்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள், உங்களைப் பற்றி என்ன உணர்கிறீர்கள், எப்படி உங்களை நீங்களே பார்க்கிறீர்கள் என்பதுதான் 'நான்' என்னும் கோட்பாடு. எப்போதுமே நீங்கள் உங்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்களோ, அதே போல்தான் செயற்படுவீர்கள். அதனால்தான் நீங்கள் கொண்டு வர வேண்டிய மாற்றத்தில் எல்லாம் தலையாய மாற்றம் 'நான்' என்பது குறித்து நீங்கள் கொண்டிருக்கும் எண்ணம் மற்றும் நம்பிக்கை ஆகும்.

நாம் என்னவாக வேண்டும் என்று சொல்வதற்கும், அதற்கான செயற்பாடுகளைச் செய்வதற்கும் பெரிய அளவிலான இடைவெளி இருக்கிறது. இந்த இடைவெளியைக் குறைக்க நமக்கு இலக்கை அடைவது குறித்த உந்துதல்/ஊக்கம் வேண்டும். இந்த ஊக்கம் தான் நமக்கும் நம்முடைய இலக்குக்கும் இடையேயுள்ள தூரத்தைக் கடக்க உதவும் எரிபொருளாகும்.

பின்வரும் மூன்று விடயங்களே உங்களை முன்னேற்றமடையச் செய்வதாக இருக்கும். 1. நீங்கள் மேம்பட்டால் மட்டுமே உங்கள் வாழ்க்கை மேம்படும். உங்கள் கற்பனை எந்த அளவுக்கு இருக்கிறதோ, அந்த அளவுக்கே மேம்பட முடியும். 2. நீங்கள் எங்கேயிருந்து வருகிறீர்கள் என்பது முக்கியமல்ல. எங்கே போகிறீர்கள் என்பதுதான் முக்கியம். இதைப் புரிந்துகொண்டுவிட்டால் எதிர்காலம் குறித்து மட்டுமே சிந்திப்பீர்கள். 3. இலக்கை அடையத் தேவையான எதையும் உங்களால் கற்றுக் கொண்டு செயற்படுத்த முடியும். எந்த அளவுக்குக் கற்றுக்கொள்கிறீர்களோ, அந்த அளவுக்கு ஸ்மார்ட்டாக நீங்கள் உருவெடுப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## உன்னால்.

முண்டியடித்துப்பொழுது விடியுது
இருண்டால் என்ன விடிந்தால் என்ன
வயது பனை மாவட்டில் ஏறி வாழ்க்கை தூக்கு கயிற்றில் தொங்குது
வாப்பு மீறி ஏறிய விலையும் வழுக்கல் சகதியில் வாழ்க்கை பிடியும்
மேடும் தரையும் வறண்டு போகுது
வாழ்வியல் சீவனம் துவண்டு கிடக்குது
வானம் பார்த்து விழியும் பிதுங்குது
வந்தால் பெரும் மழை கொட்டித் தீர்க்குது
வறண்டால் பூமி சுட்டு எரிக்குது
சேதனம் மறந்து அசேதனம் தொட்டது
பாம்பரை பயிர் செடி பாதாளம் போனது
விவசாயி வாழ்க்கை விடிவற்றானது கடலோ
தரையோ வாழ்விடமெங்கும் கரு நஞ்சாலே
ஊறிக்கிடக்குது எண்பதும் நூறும் ஆனவர் இறப்பு
இருபது முப்பதில் இழுத்துக் கிடக்குது பீடை நஞ்சும் போரியல்
தழும்பும் போட்டி போட்டு கங்கணம் கட்டுது
நீயா நானா போட்டி உலகில்
தோற்பது நாமே என்பதை மறக்குது

சி.சதி,
பசுவூர் வேலாவ்காட்டான்.

## ஈழமும் புலம்பெயர்வும்

தாய்மடி பிரிந்த தமிழ் இன உறவின்
கதறலை கூறிடும் களமாய் இக்கவி
குறைந்த பணமும் நிறைந்த மனமும்
திகழ்ந்த சொர்க்க மண்ணாய் ஈழம்

அடர்ந்த வனத்தில் மலர்ந்த மலராய்
சிரித்து மலர்ந்த எம் இன உறவுகள்
காகித மலராய் காட்சிகள் தந்து
கடந்திடும் துன்பம் ஆயிரம் என்பேன்

மண்ணில் கடந்த நினைவுகள் தினமும்
கண்ணில் நீராய் மலர்ந்திடும் போது
உலகம் வியக்க நிகழ்த்திய வீரம்
மறவா என்றும் இத்துரோக உலகம்

கனவுகள் இழந்து கடந்திடும் பயணம்
கலைத்திடும் ஈழ கனவை என்றும்

ந.விதுஷன்,
கற்கோவளம்.

## எங்கும் இல்லை காண்

ஆற்று வெள்ளம் போலும் துயர்
எம்மை வருத்துமே–என்றும்
தேற்று தர்க்கு துணையில்லாது
துயரம் விஞ்சுமே–மனிதம்
காட்டு வெள்ளம் போல் நினைத்து
காதல் கொள்வதால்–துயர்
மேட்டை உடைத்து பாய்ந்து செல்லும்
நிலையில் தோன்றுமே

சேற்று மீன்கள் துடிக்கும் துடிப்பு
காணச் சகிக்குமா?– துயர்
இல்லை என்று எண்ணும் வாழ்வு
தோன்றி நிலைக்குமா?
ஊற்று நீரில் ஓடும் மீன்கள்
இன்பம் காணுமே– மனிதம்
வேற்று நிலையிலான போதும்
துயரம் அகன்று போகுமே

விண்ணில் ஓடி மறையும் நிலவு
மனதை வாட்டுமே– என்றும்
கண்ணில் காணும் நிலவு என்றும்
நிலைத்து நிற்குமா?
பண்ணில் சேரும் அமைதி இன்பம்
மகிழ்ந்து நிற்குமா?
– கண்ணில் காணும் நிலவு என்றும்
நிலைத்து நிற்குமா?
பண்ணில் சேரும் அமைதி இன்பம்
மகிழ்ந்து நிற்குமா?– கண்ணில்
காலம் முழுதும் தோன்றும் நிலவு
எங்கும் இல்லை காண்

வளவை வளவன்.

## மௌனத்தின் தேடல்-702



### ஊனம் ஒரு குறையல்ல

காலை இழந்து விட்டேனே என
கவலை கொள்ளாதே! பெண்ணே!
வாழ வழி பலவுண்டு மனதிலே
திடம் கொண்டு ஊன்றுகோல்
உதவியுடன் தொடரட்டும்
உன் முயற்சி
ஊனம் ஊனம் ஊனம் யார்–
உடம்பிலுள்ள குறைகள்
யாவும் ஊனமில்லை என
கானம் ஒலிக்கிறது செவிமடுத்து பாரம்மா

அபிஇலம்மாலிகா, சித்தங்கேணி.

### புரிந்து கொள்ளுங்கள்

போர்களைப் பற்றி
புரிந்து கொள்ளுங்கள்
இங்கே
உடல்களை புதைத்திருப்பார்கள்
உறுப்புகளை இழந்துமிருப்பார்கள்
சனங்களோ
பூக்களையும் புலம்பல்களையும்
பார்ப்பதுமில்லை கேட்பதுமில்லை

உ. கனிஸ்ரன். அல்லையூர்.

### முடங்குதல் முடம்

ஏகமும் தாமெனும்
கொடியவர் கொடுமையால்
மனிதங்களும் குடியிருப்புகளும்
சிதறி இழப்பு ஏராளமாகியும்
குருதிச் சகதியிலிருந்து
கால் பறிபோன பின்னும்
தன்னம்பிக்கை மிகு துணிவுடன்
எழுந்து வரும் மனிதத்தை
தள்ளாது வாழ வரவேற்று
ஊக்கம் கொடு உலகமே

சி. இ.அன்புதுரை, மானிப்பாய்.

### ஊன்றுகோல்

உண்மைக்கு
ஊன்றுகோலில்லை
நேர்மையென்றும்
நிமிர்ந்து நிற்கும்
உண்மையற்றோர்
உரைகளெல்லாம்
பொய்யெனும்
ஊன்றுகோலில்
உலா வரும்
நெஞ்சத்து சாட்சியது
நெருகும் போது
பொய்மை எனும்
ஊன்றுகோல்
உலுத்துவிடும்

தமிழினியன், வவுனியா.

### ஆறுதல்

நான் காலுக்குச் செருப்பு
இல்லையென
கவலைப்பட்டேன்
காலில்லாதவனைக்
காணும் வரை
நீயும் கவலைப்படாதே
இரு காலும் இழந்தோர்
இங்கு நிறையப் பேர் உண்டு

பி.மதுஷ்சன், தையிட்டி.

### மன உறுதி

தங்கத்தில் ஒரு குறையிருந்தாலும்
தரத்தினில் குறையாதது போல்
அங்கத்தில் ஒரு குறையிருந்தாலும்
மனஉறுதி குறையாது
எதையும் தாங்கும் இதயமுடன்
வாழ்க்கை வாழ்வதற்கே
என தன்னம்பிக்கை மிளிர
நடமாடும் சுதந்திரப் பெண்மனி இவள்

சி.மகாலட்சுமி,
கொக்குவில்.

### விரக்தி

அடுக்குமாடிக் கட்டடங்கள் ஆலயங்கள்
அரைநொடியில் சரிந்த போதும்
குழந்தைகள் பெண்கள்
வயோதிபர்கள் குற்றுயிராக
கிடந்து கதறும் போதும்
பசியால் நொந்து தாகத்தால்
தவித்து எதிலியாய்
மக்கள் இடம்பெயர்ந்த போதும்
வல்லரசுகள் நானா நீயா என்று
மக்களைக் கொன்று குவிக்கின்றனவே
எமக்கு ஐ.நா சபை இருந்துமென்ன
அது இல்லாமல் போனாலும் என்ன

பிரமன், கொக்குவில்.

## மௌனத்தின் தேடல்-703



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசம் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா




காலத்தின் பதிவு 96

## வினை விதைத்தலும் வினை அறுத்தலும்

"மாங்களமான முடிவு. வா சீக்கிரம்" என்று இடையை அணைத்த கை இறுகத் தழுவிய வண்ணமே அவளை இழுத்துக் கொண்டு கொள்ளையர் குழுமி நின்ற இடத்துக்கு வந்து சேர்ந்த இளையபல்லவன், கொள்ளையர் கூட்டத்தை ஒருமுறை தன் கண்களால் சற்று வளைத்து அளவெடுத்தான்.

கொள்ளையர் முகங்களில் மகிழ்ச்சியின் அறிகுறி சிறிதும் தெரியவில்லை. எல்லா முகங்களிலும் கடுமையும் கவலையும் தண்டவமாடின. அவர்கள் துணைவிகளின் முகங்களில் பயத்தின் சாயை பெரிதும் படர்ந்து நின்றது. முதல் நடனத்தின் முடிவில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளாலும் வில்வலன் கூறிச்சென்ற சொற்களா லும் அச்சத்தின் வசப்பட்டிருந்த அந்தக் கொள்ளையர் கூட்டம், அந்த அச்சத்திலிருந்து அப்பொழுதும் விடுபடவில்லையென்பதைப் புரிந்துகொண்ட இளைய பல்லவன் அவர்கள் முன்பு மிகவும் கம்பீரத்துடன் நிமிர்ந்து நின்றான். மஞ்சளழகியின் இடையிலிருந்த கையை இறுக்கி அவள் உடலைத் தன் பக்கத்தில் சேர்ந்து நன்றாக அணைத்தும் கொண்டான். 'இப்பொழுது என்ன செய்வதாக உத்தேசம்?" என்று கொள்ளையரை நோக்கி வினவுவது போலிருந்தது அவன் செய்கை.

அவன் செய்கையையும் துணிவையும் கண்டு கொள்ளையருக்கு என்ன செய்வதென்று புரியாததால் அவர்களனைவரும் பிரமித்துப் பேசவும் சக்தியற்று நிற்கவே செய்தார்கள். வெட்கத்தை அதிகமாக அறியாத கொள்ளை மாதர்கூட இளைய பல்லவன் வெட்கம் கெட்ட முறையில் பகிரங்கமாக மஞ்சளழகியின் இடையைத் தழுவி நின்றதைக் காண இஷ்டப்படாதவர்கள் போல ஏளனக் குறியை முகத்தில் காட்டினார்கள். சிலர் இதழ்களை மடித்துத் தங்கள் வெறுப்பைப் பகிரங்கமாகக் காட்டவும் செய்தார்கள். இருந்தும் அந்தக் கூட்டத்தில் ஒருவர் கூடப் பேச முற்படாது போகவே இளையபல்லனே பேசத் தொடங்கி, "இந்த வரவேற்புக்கு என்ன காரணம்?" என்று வினவினான்.

முன் வரிசையில் நின்ற கொள்ளையர், ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். பின்னாலிருந்தவர்கள் ஏதோ முணுமுணுத்தார்கள். "ஏன் நான் கேட்பது உங்கள் காதில் விழவில்லையா?" என்று சற்றுக் கடுமையுடன் கேட்டான் இளைய பல்லவன் இரண்டாம் முறை.

கொள்ளையர் முன் வரிசையிலிருந்த யவனன் ஒருவன் மட்டும் சற்றுத் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, "இது முறையல்ல," என்று மஞ்சழகியிருந்த நிலையைத் தன் கையால் சுட்டிக்காட்டினான்.

"ஆம், ஆம்," என்று பல குரல்கள் பின்னணியிலிருந்து ஆமோதித்தன.

"எது முறையல்ல?" என்று மீண்டும் கேட்டான் இளையபல்லவன்.

"இவள் மணமாகாதவள்," என்று மற்றொரு கொள்ளைக்காரன் ஆரம்பித்தான்.

"அதைப்பற்றி உங்களுக்கென்ன கவலை?" இளைய பல்லவன் குரலில் சீற்றம் மிகுந்திருந்தது.

"கவலையிருக்கிறது. அக்ஷய முனையில் பழக்கம் ஒன்று உண்டு" என்றான் இன்னொரு கொள்ளைக்காரன்.

இளையபல்லவன் இதழ்களில் இகழ்ச்சி நகை மண்டியது. "மணம் செய்துகொள்ளப் போகும் பெண்ணுடன் தனித்துச் சில விநாடிகள் பேசக்கூடாது என்பது தான் அந்தப் பழக்கமா?" என்று பெரும் வெடியொன்றை எடுத்து அவர்களிடையே வீசினான் இளையபல்லவன்.

அந்தப் பதில் கொள்ளையர்களைச் சில விநாடிகள் ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது. பிரமை தீர்ந்தும் கூட்டத்திலொருவன், "அப்படியானால் நீங்கள் இவளை... இவளை..." என்று குழறினான்.

"திருமணம் செய்து கொள்ளப் போகிறேன். ஏன் என்னையும் உங்களைப் போல் நெறியற்ற கொள்ளைக்காரன் என்று நினைத்தீர்களா.

(தொடரும்)

---

# நான் வைரமுத்து பேசுகிறேன்... 42

## மாறும் யுகங்கள் மாறுகின்றன

அதேபோல் ஒரே மாதிரியான ஒலிகள் - காது மடல்களைத் திருகும் பழைய தாளங்கள் பழகிப்போன வாத்திய இரைச்சல்கள் இவைகளை விட்டுத் திரை இசையும் வெளிறே வேண்டி காலம் கனிந்துவிட்டது.


இதைப் புரிந்துகொண்டு தங்களைப் புதுப்பித்துக் கொள்கிறவர்கள் இன்னும் சில ஆண்டு ஜீவித்திருபார்கள் இல்லையென்றால் அவர்களை விட்டுவிட்டுப் போவதற்காக காலம் ஒன்றும் பொதுக்கூட்டம் போட்டுப் புலம்பிக்கொண்டிருக்காது.

இதுதான் காலவிதி இதுதான் கூர்தலரம் என்னால் முடிந்த வரையில் திரைப்பாடல்களைப் புதுப்பிக்கும் முயற்சியில் என்னைப் புகுத்திக் கொள்ளாவிட்டால் என் நாற்காலியின் கால்களைக் காலக்கரையான் அரிக்கத் தொடங்கிவிடும்.

எதிர்காலத்தையும் என்னையும் புரிந்து வைத்திருக்கிற வரலாறு படைக்கும் இயக்குநர்களும் இசையமைப்பாளர்களும் இந்த முயற்சிக்கு வலக்கரம் கொடுத்து வாழ்த்துச் சொல்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நன்றி. உலக மெல்லாம் இசைப்பாடல்களின் உள்ளடக்கம் எப்படி யெல்லாம் மாறுகிறது என்று எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

காதல் கனவுகள்- கட்டில் ஏக்கங்கள் கனவுகளின் சிதைவுகள் ஆசைகளின் திரிபுகள் இவைகளே பெரும்பாலும் உலகப் பாடல்களின் நிகழ்கால உள்ளடக்கங்கள்.

'ஓயிட்ஸ்நேக்' என்பர் எழுதிய போன வருடத்துப் புதிய பாட்டு ஒன்று. அதன் தலைப்பு: "உன் காதலை மொத்த மாய்க் கொடுத்துவிடு."



பாடல் இதுதான்:

**"உன் முதல் பார்வையிலேயே**
**சுவாசம் திருடினாய்**
**விட்டு விலக முடியவில்லை என்னால்**

**எலும்பில்லாத இடத்தை**
**வட்டமடிக்கும் நாயைப் போல்**
**உன்னைச் சுற்றி சுற்றி வந்தேன்**

**உன் பெயர்கூட**
**நானறியேன் உன்**
**காதலை மொத்தமாய்க் கொடுத்துவிடு"**

உலகப் பாடகன் மைக்கேல் ஜாக்சனின் பாடல் ஒன்று இப்படித் தொடங்குகிறது.

**"அடியே அழகுப் பெண்ணே!**
**குதிகால் செருப்புழகி**
**எப்பொழுதுமில்லாத காய்ச்சலை**
**எனக்குத் தந்தவளே!**
**ஏறு காரில்**
**நகர் சுற்றுவோம்**
**ஒரே ஒரு முத்தமிடு**

**எங்கே**
**இருமுறை சொல்:"**

**"எனக்காகப் பிறந்தவள்**
**நீ மட்டும்தான்**
**இருமுறை சொல்!"**

கவர்ச்சிப்பாடகி மடோனாவின் பாடல்களில் கூட அவர் உடம்பில் இருக்கும் ஆடைகளைப் போலவே ஆங்காங்கே கொஞ்சம் கவித்துவமும் ஒட்டியிருக்கிறது.

**"இதுவரை**
**காதலுக்குப் பயன்படுத்தாத**
**என் கைகளை எடுத்துக்கொள்!**
**சூரியன் வந்தால்**
**பகலுக்கு வெளிச்சம்**
**சந்திரம் வந்தால்**
**இரவுக்கு வெளிச்சம்**
**என் பெயர் சொல்லி**
**நீ என்னை எழுப்பும் போதுதான்**
**என் கண்களுக்கு வெளிச்சம்"**

இப்படி வாழ்க்கைக்கும் உணர்ச்சிகளுக்கும் வர்ணம் அடிக்கிற பாடல்களே உலகப்பாடல்களாக உலா வந்து கொண்டிருக்கின்றன.

ஏனென்றால் உலகமெங்கும் லட்சியங்களைத் தூக்கிப் பிடிக்கும் இயக்கங்கள் பெரும்பாலும் இல்லை.

துண்டு துண்டு இலட்சியங்கள் கலைஞர்களை இயக்குவதற்குப் போதுமானதாக இல்லை. எனவே பாடல்கள் வாழ்க்கையின் சிதைவுகளையும் கனவுகளையும் சித்தரிக்கின்றன.

இந்தக் காலகட்டத்தில் லட்சிய வேட்கையைத் தனிமனித ஆளுமையை உள்ளார்ந்த நம்பிக்கையை உன்னத நேயத்தை உயர்த்திப் பிடிக்கும் பாடல்களே உன்னதம் பெற வேண்டும்.

ஒரு பாடலின் பரவசத்தில் அதைக் கேட்கும் மனிதனுக்கு ஒரு சொட்டு மகிழ்ச்சியோ ஒரு சொட்டு நம்பிக்கையோ சுரக்க வேண்டும்.

இடை எழுதி, தொடை எழுதி, இல்லாத முலை எழுதி மகத்தான உள்ளடக்கங்களை மாளவிட்டு விடக் கூடாது.

ஒவ்வொரு படத்திலும் ஓர் உயர்ந்த பாட்டு மனிதனை உயர்த்தும் பாட்டு இடம் பெற வேண்டும். அப்படி எத்தனைப் பாடல்கள் இடம் பெற்றாலும் அத்தனைப் பாடல்களையும் இலவசமாய் எழுதித்தரச் சித்தமாயிருக்கிறேன்.

காலமே! உனது கையில் நானொரு தூரிகை: சின்னத் தூரிகை என்னை உயர்ந்த சித்திரங்கள் வரைய உபயோகித்துக்கொள்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

385

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## உங்கள் ஆரோக்கியத்திற்கான கேள்வி-பதில்...

**1. இறால் சாப்பிடுவது பாதுகாப்பானதா?... இறாலில் கொலஸ்திரோல் அதிகம் என்று சொல்லி அதனை சாப்பிடுவதைத் தவிர்த்திருந்தேன். ஆனால், அண்மையில் சிலர், இறால் உண்பது நல்லது என்று கூறினார்கள். அதனை மீண்டும் உண்ணத் தொடங்கிய பின்னர், எனக்கு உடல் முழுவதும் கடித்து, தடித்து, மூச்சு விடுதலில் சிரமமும் ஏற்பட்டது. அதன் பின் நான் அனைத்து கிரந்தி உணவுகளையும் தவிர்த்து விட்டேன். எனவே இறால் சாப்பிடுவது பாதுகாப்பானதா?**

இறாலில் கொலஸ்திரோல் அதிகமாக தான் காணப்படுகிறது. ஆனால், இந்த கொலஸ்திரோல் மனிதனில் தீய கொலஸ்திரோல் எனப்படும் LDL இன் அளவை அதிகரிக்க மாட்டாது. அத்துடன் இறாலிலே பல ஊட்டச்சத்துள்ள பதார்த்தங்கள், விற்றமின்கள், கனியுப்புகள், Selenium போன்ற பல Antioxidants என்பனவும் காணப்படுகின்றன. எனவே, இறால் மிகவும் ஆரோக்கியமான ஒரு உணவாகும். அதன் காரணமாகவே இறாலின் விலை, உலக சந்தையிலே மிகவும் அதிகமாக இருக்கிறது. இறாலை ஒருவர் போதுமான அளவு உட்கொள்வது பாதுகாப்பானது. ஆனால் நீங்கள் இறால் உண்ட போது உடம்பெல்லாம் கடித்து, தடித்து வந்ததாக குறிப்பிட்டுள்ளீர்கள். இதன் அர்த்தம், இறால் உங்களுக்கு ஒத்துக்கொள்ளாது ஒவ்வாமை இருக்கிறது என்பதாகும்.

இறாலுக்கு ஒவ்வாமை உடையவர்கள் அதனை தவிர்த்துக் கொள்ள வேண்டும். நீங்கள் எல்லா விதமான கிரந்தி உணவுகளையும் தவிர்க்க வேண்டிய அவசியமில்லை. அண்மையில் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி இறால் உண்பது பாதுகாப்பானது என்பதையே சுட்டிக் காட்டுகிறது.

**2. நான் உணவில் மிகுந்த கவனம் எடுப்பதோடு வீட்டு வேலைகள் அதிகம் செய்வதால் உடற்பயிற்சியும் உடலுக்கு இருக்கிறது. இருந்தும் எனது உடல் நிறை அதிகரித்துச் செல்கிறது. இதற்கு என்ன செய்யலாம்?...**

நிறை அதிகரித்துச் செல்கின்றது என்றால் இதற்கு என்ன காரணம் என்று சிந்திக்க வேண்டும். காரணத்தை அறிந்தால் தான் நிறைக் குறைப்பிற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளலாம். பொதுவாக வீட்டு வேலைகள் உடற்பயிற்சினுள் அடங்காது. இதை தவிர வேறு உடற்பயிற்சிகளைச் செய்ய வேண்டும். அன்றாடம் உண்ணும் சோறு, பிட்டு போன்ற உணவுகள் இந்த நிறை அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக இருக்கிறது.

இவற்றை தவிர்த்து ஆரோக்கியமான உணவுகளை உண்ண வேண்டும். எண்ணெய், சீனி என்பன அதிகம் சேர்த்த உணவுகளை முற்றிலும் தவிர்ப்பது நல்லது. எனவே, நிறையை குறைக்க வேண்டும் எனில், அதற்கான காரணத்தை கண்டறிந்து அதனை சரிசெய்வதற்கான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும்.

**3. மன அமைதிக் குறைவு, கவலைகள் என்பன உயர் குருதி அமுக்கம் நோய் ஏற்படுவதற்கு காரணமாக அமையலாமா?...**

நிச்சயமாக இல்லை. பொதுவாக மனக் கவலைகள் காணப்படும் போது, அவர்கள் தமது ஆரோக்கியமான உணவு முறை, உடல் நிறை பராமரிப்பு மற்றும் உடற்பயிற்சி செய்வதிலும் அக்கறை அற்றவர்களாக இருக்கிறார்கள். இதன் காரணமாக எதிர்காலத்தில் அவர்களுக்கு உயர் குருதி அமுக்க நோய் ஏற்படலாம். ஆனால், மனக் கவலைகள் இந் நோய் ஏற்படுவதற்கான அடிப்படை காரணமாக அமைய முடியாது. ஆனால், கவலைகள் மற்றும் பிரச்சினைகள் காணப்படும் போது அவர்களது குருதி அமுக்கம் தற்காலிகமாக அதிகரிக்கலாம். அத்துடன் இவ்வாறானவர்கள் இந்த கவலைகளிலிருந்து விடுபடுவதற்கு என்ன செய்ய வேண்டும் என சிந்திக்க வேண்டும். அதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

## இயற்கை என்ற இனிய வைத்தியன்

இயற்கையை இறைவனாகச் சித்தரித்து வழிபடும் மரபு அன்றுதொட்டு இருந்து வருகின்றது. அந்த இயற்கை என்ற இறைவன் வைத்தியத்திலே விற்பன்னனாக இருப்பதால் அந்த இறைவனுக்கு வைத்தீஸ்வரன் என்றும் ஒரு பெயர் இருக்கிறது. நோய்த்தடுப்புக்கும் நோய் குணமாக்கலுக்கும் அடிநாதமாய் விளங்கும் இயற்கை மூலமாகக் கிடைக்கும் வளங்களை அசட்டை செய்து செயற்கையான பொருட்களின் கால்களிலே நாம் முற்றாக சரணாகதி அடைந்து கொண்டிருக்கிறோம். அதனால் நோய் வாய்ப்பட்டுக்கொண்டிருக்கிறோம்.

வாழ்க்கை செயற்கைத்தனமாகி, இயந்திரமாகி, உணவுவகைகள் கூட பக்கற்றுகளிலும் பேணிகளிலும் வருகின்ற இரசாயன உணவுகளாக மாறி, பானங்கள் எல்லாம் போத்தலில் வருகின்ற செயற்கை சுவையூட்டிகளின் கலவையாகி, மீசை வெட்டுவதற்குக்கூட மிசின் தேவை என்று ஆகி, எமது உடற்பயிற்சிகள் இயந்திரங்களில் என்று ஆகி, எங்கள் புன்னகைகளும் நன்றி தெரிவிப்புகளும் உதட்டளவில் வரும் செயற்கை உபசாரமாக மாறி, இயற்கையிலிருந்து நாம் அந்நியப்பட்டு சென்றுகொண்டிருக்கிறோம்.

இயற்கையான சுத்தமான காற்று பல நோய்களை மாற்றும். நுரையீரலைப் பாதுகாத்து பல நோய்களைத் தடுக்கும். காற்றுக்காலம் தொடங்கியதும் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை குறைவது இதற்கு ஒரு நல்ல சான்று. இயற்கையான காற்றுக்கு கதவடைப்பு செய்து பூட்டிய அறையினுள் செயற்கை மின்விசிறியை சுற்றவிட்டு, சுற்றிவரும் அசுத்தக்காற்றை சுவாசித்து நோயை விலைகொடுத்து வாங்கும் வில்லங்க வாழ்வு அரங்கேறிக் கொண்டிருப்பது ஏன்?

சாதாரண தடிமன், காய்ச்சல், தலையிடி, தசைப்பிடிப்பு, வயிற்றுக்குழப்பம் போன்றவை மருந்துகள் எதுவுமின்றி இயற்கையாக மாறக்கூடியவை. சிறு சிறு அறிகுறிகளுக்கெல்லாம் மருந்து பாவிக்க நினைப்பது நல்லதல்ல. அவற்றை தானாக மாறவிடுவது உடல் ஆரோக்கியத்துக்கு நல்லது. பூப்பறிப்பதற்கு ஏன் கோடாரியைத் தூக்க வேண்டும்? இயற்கையில் மாறக்கூடிய நோய்களுக்கு ஏன் மாத்திரைகளைக் கையில் எடுக்க வேண்டும்?

இயற்கையை இரசிக்கும் பழக்கம் பல நோய்களைத் தீர்க்கவும் தடுக்கவும் வல்லது. பச்சைப் புற்தரையை, பஞ்சு போன்ற முகில்களை, வீசும் காற்றை, விடிகாலைப் பொழுதை, பள்ளிசெல்லும் சிறார்களை, பறக்கும் குருவிகளை, பாட்டனின் பழங் கதையை, பாட்டியின் புறுபுறுப்பை, மலரும் பூக்களை என இரசிப்பதற்கு எத்தனையோ இருக்கின்றன. இந்த பழக்கம் மனதுக்கும் உடலுக்கும் ஆரோக்கியத்தைத் தரும். மனதில் ஏற்பட்ட காயங்கள் பலவற்றை காலம் தானாக மாற்றி விடுவதை நாம் அன்றாட வாழ்வில் அவதானித்திருக்கிறோம்.

கலப்படமற்ற இயற்கையான உணவு வகைகள், நோயைத் தடுக்கவும் நோயைத் தீர்க்கவும் வல்லவை. ஊர்க்கோழி முட்டை, இளநீர், இயற்கையான உணவு உண்ணும் பசுவினுடைய பால், மோர், பச்சையிலை உண்ணும் ஆட்டின் பால், இயற்கை உரமிட்டு மருந்து தெளிக்காமல் வளர்க்கப்பட்ட மரக்கறி வகைகள், ஊர்க்கோழி இறைச்சி, இயற்கையாக வளரும் அகத்தி, சண்டி, முருங்கை, தவசி முருங்கை போன்றவற்றின் இலை வகைகள், வாழைப்பொத்தி, தானாகப் பழுத்த பழவகைகள், கடலிலே பிடித்த உடன் மீன் வகைகள், இறால், தேசிக்காய், சுண்டங்கத்தரி என எத்தனை இனிமையான, இயற்கையான, இலகுவில் கிடைக்கக் கூடிய உணவு வகைகள் எம் மத்தியில் உள்ளன. இருந்தும் சத்துமாப் பேணிகளுக்கும் இரசாயன உணவுகளுக்கும் நாம் ஆசைப்படுவதன் காரணம் என்ன? சூரியபகவான் எமக்கு சக்தியை மட்டும் கொடுக்கவில்லை. பல நோய்க் கிருமிகளிலிருந்தும் எம்மைப் பாதுகாத்துவருகின்றான். அன்றாட பாவனைப்பொருட்களான தலையணை, பாய், மெத்தை போன்றவற்றை சூரிய வெயிலில் காயவிடுவதன் மூலம் பல ஆபத்தான கிருமிகளை இயற்கையான முறையில் அழித்துவிட முடியும். இயற்கையாகப் பொழியும் மழை நீரைச் சேகரித்து அருந்திவருவது ஆரோக்கியத்துக்கு நல்லது மட்டுமல்ல, புற்று நோய்கள் மற்றும் சிறுநீரக நோய்களிலிருந்தும் எம்மைப் பாதுகாக்கும்.

பூட்டிய அறையினுள்ளேயும் வீட்டினுள்ளேயும் இரும்பு இயந்திரங்களில் ஏறி உடற்பயிற்சி செய்வதிலும் பார்க்க இயற்கையுடன் ஒன்றி வீட்டுத் தோட்டமோ விலங்கு விவசாயமோ செய்வதிலும் பயணங்களுக்கு சைக்கிள்களைப் பயன்படுத்துவதிலும் நடந்து செல்வதிலும் ஆர்வத்தை வளர்த்துக்கொள்வதன் மூலமும், எமது அன்றாட தேவைகளை நாமே செய்வதன் மூலமும் நாம் செய்யும் உடற்பயிற்சியை பயன்மிக்கதாகவும் மனதுக்கும் உடலுக்கும் புத்துணர்ச்சியைக் கொடுக்கக் கூடியதாகவும் மாற்றிக்கொள்ளலாம்.

இயற்கைக்கும் சில சமயம் இயலாமல் போகலாம். சில நோய்த்தடுப்புகளுக்கும் நோய் குணமாக்கல்களுக்கும் இயற்கையான நடைமுறைகள் மட்டும் போதாமல் போகலாம். அந்தச் சந்தர்ப்பங்களில் மட்டும் செயறகை என்ற ஆயுதத்தைத் தூக்குவோம். மொத்தத்தில் செயற்கைத் தனத்தின் கால்களில் சரணாகதி ஆகாமல் செயற்கையை சாதுரியமாகப் பயன்படுத்த முயல்வோம். இயற்கை என்ற இனிய வைத்தியனின் கவனிப்பிலே சுகம் பெறுவோம்.

**சி. சிவன்சுதன்**
**வைத்திய நிபுணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தென்னைச் செய்கையில் வெள்ளை ஈ தாக்கம்

தென்னைப்பயிர்ச் செய்கையானது வடமாகாணத்தில் அதிகளவில் பயிரிடப்பட்டுக்கொண்டு வருகின்ற பெருந் தோட்டப்பயிராகும்.

இவ் தென்னையானது பொருளாதார சுமையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அன்றாட தேவைகளினை பொருளாதார ரீதியில் உயர்த்துவதற்கு அவர்களது வாழ்க்கை தரத்தில் பங்கு எடுத்து வருகின்றது. அவ்வாறான பயனுள்ள தென்னையில் சமகாலத்தில் ஏற்பட்ட வெள்ளை ஈ தாக்கமானது வடமாகாணத்திலும் குறிப்பாக யாழ்.மாவட்டதில் நல்லூர், யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பிரதேச செயலக பிரிவிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பளை பிரதேசத்திலும் முல்லைத் தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிலும் பாரியளவில் தென்னையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இத் தாக்கமானது 2023 ஆம் ஆண்டின் தை, மாசி, பங்குனி மாதங்களில் பரவலாக காணப்பட்டதுடன் தென்னைப் பயிர்ச் செய்கை சபையினது நடவடிக்கையும் மக்களது விழிப்புணர்வுகளும் மற்றும் ஊடக விழிப்புணர்வுகளும் ஒன்றிணைந்து இத் தாக்கத்தை ஓரளவு கட்டுப்படுத்தக்கூடியதாக இருந்தது.

ஆனால் இவ்வருடம் மக்களுடைய விழிப்புணர்வு மிகவும் குறைவாக



காணப்படுவதுடன் மழை வீழ்ச்சி வீதம் குறைவாகவும் வெள்ளை ஈ பரவக்கூடிய காலநிலை சாதகமாக இருப்பதனாலும் மற்றும் முன்னைய வருடத்தில் பாதிக்கப்பட்ட தென்னை ஓலைகள் விருந்து வழங்கிகளாக இருப்பதாலும் வெள்ளை ஈ கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் சற்று கால தாமதமாகியுள்ளது.

தென்னை வளர்ப்பாளர்களே உங்கள் காணிகளில் உள்ள தென்னைகள் ஒன்று, இரண்டு இருந்தாலும் அது உங்களுக்கு நீண்ட காலமாக எப்போதும் பயனுள்ளவையாகவும் உங்களுடன் உங்கள் வாழ்க்கை முழுவதும் பயணிப்பதோடு எமது கலாசாரத்தோடு ஒன்றிணைந்து பயணிப்பதால் இவ் வெள்ளை ஈ தாக்கத்தினால் உங்கள் தென்னைகள், தென்னம் பிள்ளைகள் இறப்பதை உங்களால் ஜீரணிக்க முடியுமா?

மேலும் வெள்ளை ஈ கட்டுப்பாட்டு முறையானது சமூகம் சார்ந்து செய்ய வேண்டுமே ஒழிய தனித்தனியாக கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் உங்கள் வீட்டில் இருக்கும் வெள்ளை ஈ பக்கத்து வீட்டில் இருக்கும் தென்னையையும் வேறு பயிர்களான பலா, வாழை, மா, கமுகு போன்ற அனைத்து பயிர்களுக்கும் தாக்கம் ஏற்படுத்துவதாக இருக்கும்.

எனவே உங்கள் நேரத்தை சில மணி நேரம் செலவிட்டு கமநல சேவை நிலையத்தில் அமைந்துள்ள தென்னப்



தே.வைகுந்தன்,
பிராந்திய முகாமையாளர்,
தென்னைப்பயிர்ச்செய்கை சபை,
யாழ்ப்பாண பிராந்திய காரியாலயம்,
பளை - கிளிநொச்சி.

பயிர்ச்செய்கை சபையின் காரியாலயத்தில் பதிவிட்டு தேவையான ஆலோசனைகளைப் பெற்று நீங்களாகவோ அல்லது உங்கள் சமூகம் சார்ந்தோ வெள்ளை ஈயை கட்டுப்படுத்த முன்வர வேண்டும் என்ற விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்பதை தென்னைப் பயிர்ச்செய்கை சபை பிராந்திய காரியாலயம் உங்களை வினயமாக கேட்டுக்கொள்கின்றது.

மேலும் இக்கட்டுப்பாட்டு முறையில் சில செயற்பாடுகள் உங்களால் செய்யக் கூடிய செயற்பாடுகளாக உள்ளது. அவை யாவன

1. பாதிக்கப்பட்ட மரத்தில் கறுப்பு, வெள்ளை படிந்த கீழ் வட்ட ஓலைகளை அடியோடு வெட்டி எரிப்பதோடு வெட்டுக் காயங்களுக்கு பாவித்த மண்ணெண்ணெய் கலக்காத கழிவு எண்ணெய்யை பூசி விடுவதன் மூலம் கறுப்பு வண்டுத் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ளலாம்.

2. மரத்தின் அடியில் தேங்காய் எண்ணெய், கிறீஸ் பூசப்பட்ட மஞ்சள் நிறத்திலான பொலித்தீன் பைகளை கட்டி விடலாம்.

3. உங்களிடம் பவஸ்பிறேயர் இருப்பின் அல்லது தென்னைப் பயிர்ச்செய்கை சபையில் இருந்து வாடகை அடிப்படையில் பெறலாம்.

இதன் மூலம் நீரினை வேகமாக விசுறுதல் மூலமும் 100 மில்லி லீற்றர், வேப்ப எண்ணெய்யும் 50 கிராம் சவர்க்கார தூளையும் 10 லீற்றர் நீரில் கரைத்த கரைசலை பவஸ்பிறேயர் மூலம் ஒரு தென்னை மரம், தென்னோலைகள் முற்றாக நனையும் வரை விசிறலாம். இச் செய்கையானது 3 மாதத்திற்கு ஒரு தரம் செய்யப்பட வேண்டும்.

எனவே தென்னை வளர்ப்பாளர்களே வெள்ளை ஈகளைக்கட்டுப்படுத்தும் இச்செயற்பாடுகள் அனைத்தும் உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளதோடு அனைவரும் ஒன்றிணைந்து வட மாகாணத்து தென்னை வளத்தைப் பாதுகாப்போம்.

# இன்று ஒரு தகவல் 33



தென்கச்சி கோசுவாமிநாதன்

## கம்யூட்டர் கண்டுபிடிக்கும்!

எனக்கு வேண்டிய ஒரு எழுத்தாளர்!

அவர் ஒரு நாள் என்னிடம் வந்து காதோடு காதாக சேர் "இனிமேல் நான் புத்தகம் எழுதுவதை விட்டுடலாம்" என்று நினைக்கிறேன் என்றார். அவர் அப்படி முடிவு செய்தது மிகவும் நல்லது தான். இருந்தாலும் அவரிடம் காட்டிக்கொள்ளாமல் "உங்க வீட்டில வேணாம் என்று சொல்றாங்களா" என்று யதார்த்தமாக கேட்டார்.

அதெல்லாம் இல்லை. இப்போது எழுத்தாளர்கள் பழைய புத்தகங்களிலே இருந்து திருடி எழுதினா அதை கம்யூட்டர் கண்டுபிடித்து விடுதாம். நமக்கு எதுக்கு சேர் இந்த வம்பு. அது தான் இந்த தொழிலை விட்டுடலாம் என்று நினைக்கிறேன் என்றார். இவர் இப்படி பயப்படுவதிலே அர்த்தம் உண்டு. ஒருத்தருடைய படைப்பை இன்னொருத்தர் திருடி எழுதி வெளியிட்டு விட்டார் என்றால் அதை கம்யூட்டர் மூலமாக கண்டுபிடித்து விடலாம்.

ஒவ்வொருவரும் எழுதும் முறை வித்தியாசப்படும். சொற்களை பயன்படுத்தும் விதம், குறிப்பிட்ட சில சொற்களை பலமுறை பயன்படுத்து வது. எழுத்தாளருடைய நடை இதையெல்லாம் துல்லியமாக ஆராய்ந்து எழுதினவர் யார் என்பதை கம்யூட்டர் கண்டுபிடித்து விடும்.

"சைலண்ட் டான்" என்ற ஒரு நாவல். சோவியத் இலக்கியத்திலே தலைசிறந்த நாவல்களில் இதுவும் ஒன்று. ஆனால் இதை எழுதியவர் யார் என்பதை பற்றி ஒரு சமயம் பெரிய சர்ச்சை எழுந்தது . 1920 இல் "பாய்தர் குறையுகோ" என்பவரின் படைப்பை திருடி "மி கேயில் ஷைலோ கோப்" எழுதி விட்டார் என்பது குற்றச்சாட்டு.

இந்த குற்றச்சாட்டு உண்மையா, பொய்யா எப்படி கண்டுபிடிப்பது? இதை கம்யூட்டர் மூலமாக கண்டு பிடிப்பதற்கு முயற்சி செய்தார் ஒரு நோர்வே நாட்டுப் பேராசிரியர். (சீர் கெஸம்சா ) அவர் என்ன செய்தார் தெரியுமா? அந்த இரண்டு எழுத்தாளருடைய இரண்டு வேற வேற படைப்புகளில் இருந்து ஆயிரம் ஆயிரம் வரிகளை எடுத்து கொண் டார். சர்ச்சைக்குள்ளான இந்த வரிகளில் இருந்து ஆயிரம் வரிகளை எடுத்து கொண்டார். இவை முன்றையும் கம்யூட்டரிடம் கொடுத்தார்.

நடை, சொற்களை கையாண்டுள்ள பாங்கு, சொற்களின் பொருள் இது மாதிரி எட்டு அளவு கோளை அடிப்படையாக வைத்துக் கொண்டு பகுத்து ஆராய்ந்து பார்த்தார். அதற்கு பின்னர் "ஷைலா கோப்" தான் இதை எழுதினார். அவர் இதை திருடி எழுதவில்லை என்று நிரூபித்து காட்டினார்.

இதே மாதிரி இன்னொரு சம்பவம்! 1985 இல் ஒரு பழைய பாடல் கிடைத்தது. அதை எழுதியவர் யார் என்பது தெரியவில்லை. பல பேர் பாடல்களோட ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தங்க. அறிமுகப்படுத்திற வார்த்தைகள், கையாளப்படும் முறை இது மாதிரியான புள்ளி விபரங்களின் அடிப்டையில் ஆராய்ச்சி செய்து பார்த்து விட்டு இந்த பாடலை எழுதியவர் "சேக்ஸ்பியராக" இருக்கலாம் என்று கண்டு பிடித்தார்களாம்.

எர்னஸ்ட் கைமிங்வேயின் "கடலும் கிழவனும்" ஒரு புகழ்பெற்ற நாவல். இது 1952 இல் வெளி வந்தது. ஆனால் 1940 இற்கு பிறகு அவர் குறிப்பிடத்தக்க அளவுக்கு எதையும் எழுதவில்லை.1952 இல் வெளிவந்த இந்த நாவலுக்கு புலிட்சர் பரிசு கிடைத்தது.

1954 இல் ஹெமிங்வே நோபல் பரிசு பெற்றார். ஆனால் ஒரு இலக்கிய அறிஞர் (டாரேல் மான்செல்) ஹெமிங்வே இதை 1936 இல் தான் எழுதி இருக்க வேண்டும் என்று யூகித்தார். உடனே அவரும் அவருடைய மாணவரும் சேர்ந்து கண்டு பிடிப்பதற்கு முயற்சி செய்தார்கள். கடலும் கிழவனும் என்னும் நூலில் இருந்து 4500 வார்த்தைகள், 1933 முதல் 1951 வரை ஹெமிங்வே எழுதிய வேறு வேறு 4 நாவல்களில் இருந்து 4000 வார்தைகள் எடுத்துக் கொண்டார்கள். கம்யூட்டர் மூலம் ஆராய்ச்சி செய்து பார்த்த பொழுது இந்த கடலும் கிழவனும் நாவல் பின்னாடி எழுப்பட்ட நாவல்களை விட 1936 இல் எழுதப்பட்ட உலகின் தலைநகர் என்னும் நாவலை ஒத்திருக்கின்றது தெரிய வந்தது. அதனாலே இது 1936 இல் எழுதியது என்பது உறுதியாகிவிட்டது.

கம்பராமாயாணத்தில் கூட சில பாடல்கள் கம்பரால் எழுதப்பட்டது இல்லை என்று ரசிகமணி டி.கே.சி சொல்லுவார் இல்லையா? அதையெல்லாம் துல்லியமாக கண்டு பிடிப்பதற்கு வரும் காலத்தில் கம்யூட்டர் உதவும் போல் இருக்கு. இப்படியெல்லாம் இருக்கும் பொழுது என்னிடம் ஆரம்பத்தில் வந்த நண்பர் பயந்தது நியாயம் தானே.

ஒருத்தர் ஒரு சிறுகதையை எழுதி எடுத்து கொண்டு ஒரு பத்திரிகை காரியாலயத்திற்கு போனார். ஆசிரியரைப் பார்த்தார் . சேர் ஒரு அற்புதமான கதை எழுதி கொண்டு வந்து இருக்கிறேன். பார்க்கிறீங்களா என்று கேட்டார்? என்ன தலைப்பு என்று கேட்டார் அவர். வாழ்வு மலர்ந்தது என்று தலைப்பு கொடுத்து இருக்கேன் என்றார் இவர். வாங்கி படித்து பார்த்து விட்டு வாழ்வு மலர்ந்து என்பதற்கு பதிலாக மலர்ந்த வாழ்வு என்று இருக்கலாமே என்றார். இரண்டும் ஒரே பொருள் தானே சேர் என்றார் இவர். அதுக்கில்லை. கதை தான் வரிக்கு வரி மாறாம அப்படியே இருக்குது தலைப்பையாவது கொஞ்சம் மாத்தலாமே என்று பார்த்தேன் என்றார் ஆசிரியர்.

என்ன சொல்லுறீங்க என்றார் இவர். ஒன்றும் புரியாமல்.! பதினைந்து வருடத்திற்கு முன்னால் நான் எழுதிய கதை சேர் இது என்றார் அந்த ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவி வெப்பமடைதல் அதிகரிப்பு

# அதிக உயிரினங்கள் இறக்கும் சாத்தியம்

(பிரஸ்ஸல்ஸ்)

**புவி வெப்பமடைதல் அதிகரித்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் காலநிலை மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.**

இதன்படி, ஒரு வருடத்திற்கு 1.5 டிகிரி செல்சியஸ் இற்கும் அதிகமாக புவி வெப்பமடைந்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் காலநிலை மத்திய நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வருடத்தில் அதிகளவான வெப்பம் பதிவாகியுள்ளமையினால் 1,000 இற்கும் அதிகமான உயிரினங்கள் இறப்பதற்கான சாத்தியம் காணப்படுவதாக பிரித்தானிய ரோயல் வானிலை ஆய்வுக் கழகத்தின் தலைமை நிர்வாகி லிஸ் பென்ட்லிட் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், கரிம உமிழ்வுகளைக் குறைப்பதற்கு அவசர நடவடிக்கைகள் மேற்கொண்டால் புவி வெப்பமாதலின் வேகம் குறைக்கப்படலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புவி வெப்பமடைதல் 2 டிகிரி செல்சியஸாக உயர்வடைந்தால் கடல்மட்ட உயர்வு, பல்லுயிர் வள இழப்பு உள்ளிட்ட பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் இந்த வருடத்தின் ஜனவரி மாதம் வரையிலான காலப்பகுதியில் மாத்திரம் 1.52 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை அடைந்திருந்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் வருடங்களில் பூமி வெப்பநிலை 4 டிகிரி செல்சியஸ் ஆக அதிகரிப்பதற்கு வாய்ப்புகள் அதிகமாகவுள்ளதாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் காலநிலை மத்திய நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# பாகிஸ்தான் பாராளுமன்ற தேர்தல்; வெற்றியை கொண்டாட தயாராகுங்கள்

## முன்னாள் பிரதமர் இம்ரான்கான் அறிவிப்பு




(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் பாராளுமன்ற தேர்தல் கடந்த வியாழக்கிழமை நடந்து முடிந்தது. வாக்குப்பதிவு முடிந்ததும் வாக்குகளை எண்ணும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்தத் தேர்தலில் தேர்தலில் முன்னாள் பிரதமர் இம்ரான்கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக்-ஏ-இன்சாப் (பிடிஐ) கட்சியின் ஆதரவு பெற்ற சுயேட்சை வேட்பாளர்கள் அதிக இடங்களில் வெற்றி பெற்று தொடர்ந்து முன்னிலை வகித்து வருகின்றனர்.

முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் -நவாஸ் (பிஎம்எல்-என்) கட்சி 2 ஆவது இடத்திலும் முன்னாள் வெளியுறவுத் துறை மந்திரி பிலாவல் புட்டோ ஜர்தாரியின் பாகிஸ்தான் மக்கள் கட்சி (பிபிபி) 3 ஆவது இடத்திலும் உள்ளன.

மொத்தமுள்ள 266 இடங்களுக்கு சுமார் 200 இடங்களில் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில் பிடிஐ ஆதரவு சுயேச்சை வேட்பாளர்கள் சுமார் 70 இடங்களைக் கைப்பற்றினர்.

பிஎம்எல்-என் கட்சிக்கு 60 இடங்களும் பிபிபி கட்சிக்கு 40 இடங்களும் கிடைத்துள்ளன.

இம்ரான்கானின் செல்வாக்கு அதிகம் நிறைந்த கைபர் பக்துன்கவா மாகாணத்தில் தான் அவரது பிடிஐ கட்சி ஆதரவு வேட்பாளர்களுக்கு அதிக இடங்கள் கிடைத்துள்ளன.

இந்நிலையில், பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றதாக சிறையில் உள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் அறிவித்துள்ளார்.

அதனை கொண்டாடுமாறு தனது ஆதரவாளர்களை அவர் கேட்டுக் கொண்டுள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் மொத்தம் 336 இடங்கள் இருக்கின்றன. இதில் 266 இடங்கள் மட்டும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவை.

எஞ்சிய 70 இடங்கள் வெற்றி பெற்ற கட்சிகளின் பெரும்பான்மைக்கு ஏற்ப பகிர்ந்தளிக்கப்படும். ஒட்டு மொத்தமாக 169 இடங்களை கைப்பற்றும் கட்சியே ஆட்சி கட்டிலில் அமரும்.

இதனிடையே முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர் நவாஸ் ஷெரீப் மற்றும் பிபிபி கட்சியின் இணைத்தலைவர் ஆசிப் அலி ஜர்தாரி ஆகியோர் நேற்று லாகூரில் ஒரு சந்திப்பை நடத்தியதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தேர்தல் வன்முறையில் 2 பேர் கொல்லப்பட்டனர். பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசி கலவரக்காரர்களை கலைத்தனர். 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

மிகப் பெரிய கட்சிகளின் தலைவர்கள் தாங்களே வெற்றி பெற்றுள்ளதாக அறிவித்துள்ளதால், அங்கு அடுத்த ஆட்சியை அமைக்கப் போவது யார் என்பதில் தொடர்ந்து இழுபறி நீடித்து வருகிறது. (நி)

# அபுதாபியில் இந்துக்கோயில்



(அபுதாபி)

ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியில் இந்து ஆலயம் ஒன்று திறக்கப்படவுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த கோவில் எதிர்வரும் 14 ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் திறந்து வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாரம்பரிய இந்து முறைப்படி கட்டப்பட்டுள்ள இந்த ஆலயம் 108 அடி உயரமும் 180 அடி அகலமும் கொண்டதாகவும் ஆலய மைதானம் 27 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள 7 அமீரகங்களை குறிக்கும் வகையில் 7 கோபுரங்கள் கட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மேற்கு ஆசியாவின் மிகப் பெரிய இந்து கோயிலாக கட்டப்பட்டுள்ள பிரம்மாண்ட கட்டடத்தில் 10,000 பேர் வரைக்கும் செல்லக்கூடியதாய் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# வரலாறு காணாத அளவு கொக்கோ விலை உயர்வு

(ஆபிரிக்கா)

கொக்கோ விலை அதிகரித்து உள்ளதால் சொக்லட் மற்றும் கொக்கோ சார்ந்த பொருட்களின் விலை உயர்வடைய வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்கு ஆபிரிக்காவில் வறண்ட வானிலை பயிர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதால் உலகளாவிய ரீதியில் கொக்கோ விலை பாரியளவில் அதிகரித்துள்ளது.

சொக்லட் தயாரிப்பதற்கான முக்கிய மூலப்பொருளின் விலை கடந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து இப்போது இருமடங்காக அதிகரித்துள்ளது.

நியூயோர்க் - கமாடிட்டிஸ் சந்தையில் கொக்கோ விலை ஒரு டன்னுக்கு $5,874 (£4,655) என்ற புதிய உயர்வையும் எட்டி உள்ளது.

மேலும் உயர்ந்து வரும் கொக்கோ விலைகள் ஏற்கனவே நுகர்வோரிடம் வடிகட்டப்பட்டு முக்கிய சொக்லட் தயாரிப்பாளர்களை நெருக்கி வருகின்றன. வரலாற்றுச் சிறப்பு மிக்க கொக்கோ விலைகள் இந்த ஆண்டு வருவாய் வளர்ச்சியைக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று உலகின் மிகப்பெரிய சொக்லட் உற்பத்தியாளர்கள் எச்சரித்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில்
இருந்துதான் 'வலிமை எல்லாம் கிடைக்கிறது.
– காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விடைத்தாள் திருத்தும் பணியை தாமதப்படுத்தி விடாதீர்கள்

அரசாங்கம் பலயீனப்படும்போது தொழிற் சங்கப் போராட்டங்கள் வீரியமடையும் என்பது உலக வரலாறு.

சிலவேளைகளில் தொழிற்சங்கப் போராட்டம் வலுப்பெறுவதன் காரணமாக அரசாங்கம் பலமிழந்து போகின்ற சம்பவங்களும் உண்டு.

எதுஎவ்வாறாயினும் தொழிற்சங்கப் போராட்டங்களிலும் நியாயத்துவமும் தர்மமும் இருக்க வேண்டும்.

அதனை மீறி எந்தத் தொழிற்சங்கப் போராட்டத்தை நடத்தினாலும் அந்தப் போராட்டம் தம்மையும் அழித்து நாட்டு மக்களையும் அழிப்பதாகவே இருக்கும்.

ஆம், இப்போது இலங்கையில் தொழிற் சங்கப் போராட்டம் வலுப்பெற்று வருவதைக் காணமுடிகிறது.

ஆனால் அந்தப் போராட்டம் பொதுமக்களை – மாணவர்களை – நோயாளர்களைப் பாதிக்குமாக இருந்தால், அதைவிட்ட அநியாயம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

இதுதவிர, தொழிற்சங்கப் போராட்டம் என்பது அரசியல் கட்சி சார்ந்ததாக அல்லது பக்கச்சார்புடையதாக இருக்கும்போது அந்தப் போராட்டமும் நீதியற்றதாகவே இருக்கும்.

உண்மையில் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து பணவீக்கம் வேகமாக அதிகரித்துச் செல்லும்போது, நிரந்தர வருமானம் உழைப்பவர்களே முதலில் பாதிப்படைவர் என்பது ஏற்புடைய உண்மை.

இங்கு நிரந்தர வருமானம் உழைப்பவர்கள் என்பது அரச சம்பளம் பெறுபவர்களைக் குறித்து நிற்கும்.

இவ்வாறு அரச சம்பளம் உழைப்பவர்கள் பொருளாதார மந்த நிலையின்போது,போராட்டங்களைத் தொடங்குகின்ற சந்தர்ப்பங்கள் உண்டு.

ஆயினும் ஒரு விடயத்தை அனைத்துத் தொழிற்சங்கங்களும் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதாவது குறித்த அரச நிறுவனமும் அதில் பணியாற்றுகின்ற ஊழியர்களும் எத்தேவையின் பொருட்டுத் தொழிற்படுகிறார்களோ அத் தொழிற்பாடு எந்தவகையிலும் பாதிப்படையாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

உதாரணத்துக்கு நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கின்ற மருத்துவர்களும் துணை மருத்துவ சேவையாளர்களும் இதர சுகாதார ஊழியர்களும் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கும்போது, அதனால் நோயாளர்களுக்கு எந்தவித அசௌகரியங்களும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

அதேபோன்று ஆசிரியர் தொழிற்சங்கங்கள் ஊதிய உயர்வு கோரிப் போராட்டம் நடத்தலாம். அதற்காக விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபட மாட்டோம் எனக் கூறுவது நியாயமற்றது.

தங்களிடம் படித்த மாணவர்கள் எழுதிய விடைத்தாளைத் திருத்துவதற்கு ஊதிய உயர்வு கேட்பதென்பது சீர்தூக்கி ஆராயப்பட வேண்டிய விடயம்.

இருந்தும் இந்த நாட்டின் அரச நிர்வாகம் சில கொடுப்பனவுகளை வழங்குகின்ற நடைமுறையில், விடைத்தாள் திருத்தும் பணிக்கான கொடுப்பனவுகளும் வழங்கப்படுகின்றன.

இருந்தும் கொடுப்பனவு எதுவும் வழங்காவிட்டாலும் பரவாயில்லை. நாங்கள் எங்கள் மாணவர்களின் விடைத்தாள்களைத் திருத்தி அவர்களின் எதிர்காலத்துக்கு உதவுவதுடன் ஏனைய மாணவர்களும் உரிய காலத்தில் உரிய பரீட்சைகளில் தோற்றுவதற்கு உறுதுணையாக இருப்போம் எனக் கூற வேண்டும்.

அதுதான் குருதர்மம். இந்தத் தர்மத்தை சம்பந்தப்பட்ட ஆசிரியர் தொழிற்சங்கங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

# விமான நிலையங்களின் நிர்வாகம் அதானி குழுமத்திடம்

## கலந்துரையாடல்கள் ஆரம்பம்

(டெல்லி)

கட்டுநாயக்க பண்டாரநாயக்க, சர்வதேச விமான நிலையம் உட்பட இலங்கையில் உள்ள விமான நிலையங்களின் நிர்வாகம் தொடர்பாக இந்தியாவின் அதானி குழுமம், இலங்கை அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கொழும்பு இரத்மலானை விமான நிலையம் மற்றும் மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையம் என்பவற்றின் நிர்வாகங்களை பெற்றுக்கொள்வது தொடர்பாக இந்த கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ம-7)

## இந்திய விஜயத்தின் பின்

# நாடு திரும்பிய தே.ம. சக்தியினர்

(கொழும்பு)

இந்திய அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று ஐந்து நாட்கள் உத்தியோகபூர்வ இந்திய விஜயத்தில் ஈடுபட்டிருந்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க உள்ளிட்ட குழுவினர் நேற்று பிற்பகல் நாடு திரும்பினர்.

இந்த விஜயத்தின் போது, அநுரகுமார திசாநாயக்க, இந்திய வெளிவிவகார அமைச்சர், இந்திய பாதுகாப்பு ஆலோசகர், இந்திய வெளிவிவகார செயலாளர் மற்றும் இராஜதந்திரிகளை சந்தித்ததோடு,

இந்தியாவின் பிரபல வர்த்தகர்களுடனும் அநுரகுமார திசாநாயக்க உள்ளிட்ட குழுவினர் கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# மறக்கமுடியாத இசைக்கச்சேரி

## ஹரிகரன் முகநூலில் பதிவு

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ்ப்பாணம் முற்றவெளி அரங்கில் நடைபெற்றுள்ள ஹரிகரன் ஸ்டார் நைட் இசை நிகழ்ச்சி தொடர்பில் பின்னணிப்பாடகர் ஹரிகரன் தனது முகநூலில்,

உங்கள் அதீத அன்பும் ஆதரவும் இசையின் ஒருங்கிணைக்கும் சக்தியை உண்மையிலேயே வெளிப்படுத்தியது.

ஒன்றாக, நாங்கள் நல்லிணக்கத்தையும் இணைப்பையும் கொண்டாடினோம். இந்த நிகழ்வை ஒழுங்கமைப் பதில் அபார முயற்சி செய்த கலாமாஸ்டர் மற்றும் இந்திரகுமார் பத்மநாதன் அவர்களுக்கு சிறப்பு நன்றி. ஒவ்வொரு கணத்திற்கும் நன்றி என பதிவிட்டுள்ளார். (ம-7)

# பரமபிதா காட்டிய பாதை

## பரிவோடு நோக்குவோம் பாசத்தோடு தொடுவோம்

ஒரு தொழுநோயாளரை இயேசு குணமாக்கியதை இன்றைய பைபிளின் மாற்கு நற்செய்தி 1:40-45பகுதி விளக்குகின்றது. தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் இயேசுவின் காலத்தில் அடைந்த துன்பங்கள் அளவு கடந்தன. உடல் வலியால் மட்டுமல்ல, சமூகத்தினுடைய கொடுமையாலும் வலியாலும் புறக்கணிக்கப்பட்டனர். வெறுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, ஓரந்தள்ளப்பட்டனர். இந்த சூழ்நிலையில் இயேசு தொழுநோயாளர் ஒருவர்மீது பரிவு கொள்கிறார். அவரைத் தொடுகிறார், அவரைக்குணப்படுத்துகிறார். மனிதர்கள்மீது இயேசு வைத்திருக்கும் பரிவிரக்கம் இங்கே வெளிப்படுகிறது.

தொடுதல் பல வகைப்படும்: அணைப்பதற்கு மன அழுத்தத்தை குறைப்பதற்கு, பாராட்டுவதற்கு ஆசீர்வதிப்பதற்கு,மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்கு குணப்படுத்துவதற்கு என நேர்மறையானவையும். அடித்தல், துன்புறுத்துதல், காயப்படுத்துதல், பாலியல் வன்முறை செய்தல் போன்றவை எதிர்மறையான இழிவான தொடுதல்களுமாகும். தொடாமல் இருப்பதுவும் ஒரு வன்முறையே என்கிறார்கள் மன தத்துவ வல்லுநர்கள். இங்கு தொழுநோயாளர்களைத் தொடுவது தீட்டாகக் கருதப்பட்ட அக்காலத்தில் இயேசுவின் தொடுதல் நேர்மறையானதாக, நலப்படுத்தும் தொடுதலாக மட்டும் அமையாமல் சமூகத்தடைகளைத் தகர்த்தெறியும் புரட்சித்தொடுதலாகவும் அமைகிறது. நாமும் பிறரை அன்போடு, பாசத்தோடு தொடுவோம். சமூகத்தடைகளை நமது தொடுதலால் உடைப்போம்.

தொழுநோயாளர் ஒருவர் இயேசுவிடம் வந்து "நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்" என்று முழந்தாள் படியிட்டு வேண்டும்போது, இயேசு "நான் விரும்புகிறேன் உமது நோய் நீங்கி நலம் பெறுக" என்று சொல்லி அவரைத் தொட்டுக் குணப்படுத்தியதை இறைவார்த்தைகள் தெளிவுபடுத்துகின்றன.

இந்த இறைவார்த்தைகள் நம்மில் எழுப்பும் கேள்வி: ஒருவர் நலம் பெறவேண்டும் என்றால் யார் விரும்ப வேண்டும் என்பதுதான். நோயாளர், இறைவன் இருவரும் விரும்பவேண்டும் என எடுத்துக்காட்டுகின்றன. இதிலே நமது கவனத்தைக் கவரும் ஒரு செய்தி இயேசு அவரது உள்ளத்தையும், ஆன்மாவையும் தொட்டார், நலமாக்கினார் என்பதுதான்.

கேள்வி கேட்பவனுக்கு உதவுவதற்கு நாம் பயப்படுகிறோம். பிறருக்கு உதவுவதில் இன்று தெளிவுகள், விளக்கங்கள், விவரங்கள் கொடுத்து உதவும் உறவை ஏற்படுத்தவும் நாம் தயங்குகிறோம். ஆனால் ஒரு தயக்கம் நிறைந்த கேள்வி கேட்டவனுக்கு, இயேசு அவர் கேட்காத கேள்விகளுக்கெல்லாம் விளக்கமாகவும் விரிவாகவும் பதில் தருகிறார். அந்த தொழுநோயாளியைத் தொட்டுத் தூக்கி குணமாக்கியதோடு நில்லாமல், நோய் நீங்கினால் மட்டும் போதாது. அவன் சமுதாயத்தோடு இணைந்து வாழ வேண்டும் என்பதற்காகக் குருவிடம் காட்ட ஆலோசனை அளிக்கிறார். நம் இயேசு இவ்வாறு கூடுதல் கரிசனை உடையவர். நாங்கள் தயங்கலாம் இயேசு தாராளமானவர். தாமாக முன்வந்து உதவுபவர். ஆறுதலும் ஆலோசனையும் தருவார். ஆகவே எதையும் தயங்காமல் கேட்போம். கேட்பதற்கும் மேலாக தருபவர் நம் இயேசு. எங்களிடம் கேட்கத் தயங்குவோருக்கு இயேசுவைப்போல நாங்களாக முன்வந்து உதவுவோம்.

தொழுநோயாளர்கள் ஊருக்கு வெளியேதான் வசிக்க அனுமதி உண்டு. அப்படியிருந்த காலத்தில், தொழுநோயாளர் இயேசுவைத் தேடி வருகிறார். இயேசுவும் அவரை கடிந்து கொள்ளவில்லை. இயேசு அவரைப் புறந்தள்ளிவிடவுமில்லை. இயேசு அவரது உணர்வுகளைப்புரிந்து கொள்கிறார். அவருடைய தேவைதான் இயேசுவின் கண்முன்னால் நிற்கிறது.இந்தசமூகம் என்ன நினைக்கும் என்று அவர் கவலைப்படவில்லை. இயேசு அவரைத்தொடுவது மிகப்பெரிய தாக்கத்தை அவருள் நிச்சயம் ஏற்படுத்தியிருக்கும். அந்த தாக்கம் நம்பிக்கையாக உருவெடுக்கிறது. இயேசு அவருடைய நம்பிக்கையின் பொருட்டு, அவருக்குக் குணம் அளிக்கிறார். சமூகத்திற்கு அஞ்சாதவர் இயேசு. செய்வது சரியென்றால், எதற்கும் அஞ்சாமல், எவருக்கும் பயப்படாமல் துணிவோடு செயற்படவேண்டும் என்பதுதான் இயேசு நமக்குத்தரும் செய்தி.

நாம் வாழும் சமூகத்தில் இன்று தொழுநோய் கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஆனால் ஏற்றத்தாழ்வுகள் அதிகாரப்போட்டிகள், அரசியல் போட்டிகள், கட்சி மனப்பான்மை, என வேறு வடிவங்களில் அருவருக்கத்தக்க அந்த தொழுநோய் இன்னும் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறது. அத்துடன் சமூகமதிப்பு மறுக்கப்படுகின்றது. எனவே இன்று நமது கடமை என்ன? இயேசுவைப் போல நாமும் மனதளவிலும் உடலளவிலும் சமூக ஏற்றத் தாழ்வுகள் போன்ற தொழுநோயைத் துடைத்தெறிபவர்களாக உருவாக வேண்டும். அனைத்துத் தரப்பு மக்களுடனும், குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களுடன் உறவு கொண்டு, அவர்களோடு உறவாடி ,யேசுவின் பணியைத் தொடர்வோம்.

**ம.பிரான்சிஸ்க்,**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி.மத்திய கல்லூரியில் நெல் அறுவடைவிழா



(அக்கராயன்)

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் முதற்தடவையாக நெல் அறுவடைவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி தெற்கு வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.நளாயினி வசந்தன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார்.(நி-350)




# விவசாய நிலங்களை வழங்குமாறு புதிய குடியிருப்பு மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கிழக்கு புதிய குடியிருப்பு மக்கள் வயல் நிலம் வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.


புதுக் குடியிருப்பில் உள்ள புதிய குடியிருப்பில் 500 வரையான குடும்பங்கள் வாழ்கின்றன.

நிரந்தர வீடுகளுக்காக மட்டுமே காணிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் பயிர்ச் செய்கைக்கான நிலங்கள் வழங்கப்படாததன் காரணமாக புதிய குடியிருப்பில் வாழ்கின்ற குடும்பங்கள் விவசாய முயற்சிகள் மேற்கொள்ள முடியாத நிலைமையில் உள்ளனர்.

இதன் காரணமாக பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமக்கு பயிர்ச் செய்கைக்குரிய நிலங்கள் வழங்கப்படுமானால் விவசாய முயற்சிகளில் ஈடுபட முடியும் எனவும் புதிய குடியிருப்பு மக்கள் தெரிவிக்கின்றனர். (நி-350)

# சாலை ஆற்றினை ஆழப்படுத்த ஆய்வு செய்த 'நாரா' நிறுவனம்



(அக்கராயன்)

முல்லைத்தீவு சாலை ஆற்றில் நாரா நிறுவனத்தினர் நேற்று முன்தினம் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். சாலை ஆற்றில் இறால், மீன்பிடியில் ஈடுபடுகின்ற கடற்றொழிலாளர்களினால் சாலை ஆற்றினை சேறினை அகற்றி ஆழப்படுத்தி தருமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வரும் நிலையில் சாலை ஆற்று பகுதியில் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

2009 ஆம் ஆண்டில் போர் நடைபெற்ற போது சாலை ஆற்றின் இரு பக்கங்களிலும் நீண்ட மண் அணைகள் அமைத்திருந்தார்கள். அவை சாலை ஆற்றினை ஆழங் குறைந்ததாக மாற்றி உள்ளது.

முன்பு படகுகளில் சென்ற பகுதிகள் எல்லாம் தற்போது படகுகளில் செல்ல முடியாத பகுதிகளாக மாறி உள்ளன.


எனவே சாலை ஆற்றினை ஆழப்படுத்துவதற்காகவே இவ் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கடற்றொழிலாளர்களினால் தெரிவிக்கப்பட்டது.(நி-350)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 450 | 400 | 500 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 150 | 140 |
| பச்சைமிளகாய் | 1000 | 1100 | 1200 | 980 |
| தக்காளி | 700 | 700 | 800 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 160 | 130 |
| கோவா | 600 | 500 | 600 | 650 |
| கரட் | 850 | 900 | 1000 | 1100 |
| பூசணி | 280 | 280 | 300 | 270 |
| புடோல் | 200 | 250 | 250 | 200 |
| வாழைக்காய் | 250 | 250 | 300 | 270 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 350 | 250 |
| பெரிய வெங்காயம் | 320 | 380 | 400 | 300 |
| பாகற்காய் | 600 | 450 | 600 | 520 |
| வெண்டக்காய் | 600 | 450 | 600 | 435 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 200 | 100 |
| பயற்றங்காய் | 600 | 600 | 600 | 660 |
| லீக்ஸ் | 600 | 480 | 600 | 600 |
| பீற்றூட் | 450 | 400 | 400 | 400 |
| கறிமிளகாய் | 600 | 900 | 1200 | 700 |
| முருங்கைக்காய் | 1800 | 2500 | 2000 | 2000 |
| போஞ்சி | 550 | 400 | 600 | 400 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 380 | -- |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 100 | 70-100 |
| தேசிக்காய் | 150 | 200 | 200 | 190 |
| தேங்காய் (ஒன்று) | 110 | 100 | 70-110 | 80-90 |
| இராசவள்ளி | 320 | 400 | 600 | 450 |
| வெங்காயப்பூ | 350 | 250 | 400 | 250 |
| முள்ளங்கி | 160 | 150 | 300 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 120 |
| வல்லாரை | 60 | 250 | 80 | 70 |
| ஈரப்பலா | 100 | 100 | 200 | 110 |

# தலைக்கவசத்தில் வைத்து ஐஸ் போதை பொருள் கடத்தல்

## இளைஞன் கைது



(மன்னார்)

மன்னார் சாவற்கட்டு பகுதியில் மோட்டர்சைக்கிள் ஹெல்மட்டினுள் சூட்சுமமான முறையில் ஐஸ் போதை பொருளை மறைத்து விற்பனைக்காக கொண்டு வந்த 31 வயது இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பொலிஸ் குற்ற புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்க பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் பொலிஸார் சாவற்கட்டு பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

விடத்தல் தீவு பகுதியில் இருந்து R15 ரக மோட்டார் சைக்கிளில் வருகை தந்த குறித்த இளைஞன் தலை கவசத்தின் உட்பகுதியில் சூட்சமமான முறையில் 20 கிராம் 850 மில்லிகிராம் ஐஸ் போதை பொருளை மறைத்து வைத்திருந்த நிலையின் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரை கைது செய்துள்ள மன்னார் குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினர் சந்தேக நபர் மற்றும் கைப்பற்றப்பட்ட போதை பொருள் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் மற்றும் சான்று பொருட்கள் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-285)

வேலையாட்கள் தேவை
குபுது ஹோட்டல்
➢ Cook Maker (Fried Rice,Kottu தயாரிப்பவர்)
➢ Waiter
➢ Cleaner
18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் விண்ணப்பிக்கலாம்.
Kuputhu Hotel,Kodikamam.
தொடர்புக்கு-
077 950 7751
(நி-9323)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி.
போகினி கோகிலன்
31.01.2024 அன்று பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் Bachelor of Education எனும் பட்டத்தைப் பெற்றதையிட்டு அக மகிழ்ந்து வாழ்த்துகிறோம்.
Best Wishes
வாழ்த்துவோர்
கணவர். திரு.கோகிலன்
திரு.திருமதி.சோதிலிங்கம் குடும்பம்
திரு.திருமதி.இராகுலன் குடும்பம்
திரு.திருமதி. சுஜாந்தன் குடும்பம்.
(18963)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆணொருவரின்...

காணப்பட்டது.

பிரதேசவாசிகள் வழங்கிய தகவலுக்கமைய சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33)

## 11 நாட்களுக்கு...

இதில் அதே பகுதியைச் சேர்ந்த டெனிஸ்ரன் கீர்த்தனா (வயது-29) என்ற பெண்ணே மீட்கப்பட்டவராவார்.

புதுக்குடியிருப்பு ஒன்பதாம் வட்டார பகுதியில் வசித்து வந்த குறித்த பெண், குழந்தை ஒன்றை பிரசவித்த நிலையில் கடந்த 11 நாட்களாக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் குறித்த பெண் வீடு திரும்பிய நிலையில் வீட்டில் அனைவரும் உறங்கிக் கொண்டிருந்த வேளை நள்ளிரவு வீட்டிலிருந்து வெளியே சென்றுள்ளார்.

குறித்த பெண்ணை காணவில்லை என வீட்டார் மற்றும் அயலவர்கள், கிராமத்தவர்கள் இணைந்து தேடுதல் நடாத்தியும் எங்கும் கண்டுபிடிக்க முடியாத நிலையில் நேற்றுக் காலை 8 மணியளவில் வீட்டுக் கிணற்றுக்குள் சடலமாக இருப்பதனை அவதானித்த குடும்பத்தினர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர் .

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் குறித்த பெண்ணின் சடலத்தை மீட்டுள்ளனர். (ம-7,299)

## முட்டை...

வதால் விலையை அதிகரிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் திங்கட்கிழமை முதல் உள்ளூர் முட்டை ஒன்றின் விலை 65 ரூபாயாக அதிகரிக்கலாம் என அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கத்தின் தலைவர் அன்ரன் அப்புஹாமி தெரிவித்துள்ளார்.

தற்போது சந்தையில் முட்டையின் விலை 60 ரூபாயாக உள்ளது.

இதனிடையே, சதொச கடைகளின் மூலம் 43 ரூபாய்க்கு வழங்கப்பட்டு வந்த இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் தற்போது அந்த கடைகளில் கிடைக்கவில்லை என வாடிக்கையாளர்கள் விசனம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வரி அதிகரிப்பு...

மானம் 25 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

219 பில்லியன் ரூபாய் வருமானம் எதிர்பார்க்கப்பட்டபோதும், 274 பில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுங்கத் திணைக்களத்தின் வருமானம் 11 சதவீதத்தால் அதிகரித்துள்ளது எனத் தெரிவித்துள்ள அவர், மதுவரித் திணைக்களத்தின் வருமானமும் கூட எதிர்பார்த்ததைவிட அதிகரித்துள்ளது எனக் குறிப்பிட்டார்.

அத்துடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருமானம் 114 பில்லியன் ரூபாயாக பதிவாகியுள்ளது.

எனவே அரசாங்க வருமான அதிகரிப்பானது நாட்டுப் பிரஜைகளின் நலனை மேம்படுத்தும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ம-7)

## தேர்தலை...

சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்படுகின்றபோதிலும் மக்கள் எதிர்பார்க்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கும் பொதுத் தேர்தலுக்கும் பின்னரே அதனை இல்லாதொழிக்க வேண்டும்.

புதிய மக்கள் ஆணையின் மூலமே அது இடம்பெற வேண்டும்.

இந்த வருட இறுதியில் நடைபெறவுள்ள தேர்தலில் ஜனாதிபதி மக்கள் ஆணையை பெற முடியாது என்பதனாலேயே குறித்த தேர்தலை ஆளுந்தரப்பு இரத்துச் செய்ய எத்தணிக்கிறது.

இதனாலேயே அரசாங்கம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையில் திருத்தங்களை கொண்டுவர முயற்சித்து வருகின்றது.

உண்மையான அபிலாஷையுடன் இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் திருத்தங்களை கொண்டு வர முயற்சித்தால் நாமும் அதற்கு ஆதரவு வழங்குவோம்.

எனவே, இங்கு அவ்வாறான உண்மையான நோக்கம் இல்லை எனவும், தேர்தலை ஒத்திவைக்கும் மறைமுகமான நோக்கம் உள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாட்டில் அரசாங்கம் வேறாக செயற்படும்போது ஜனாதிபதி தமது சொந்த நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே செயற்பட்டு வருவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ் சுமத்தியுள்ளார். (ம-7)

## ரணில்...

அவுஸ்திரேலியாவின் பெர்த் நகரில் 7ஆவது இந்தியப் பெருங்கடல் மாநாட்டில் கலந்துகொள்ள சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை சந்தித்து இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

இருநாட்டு ஒத்துழைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை அதனை தொடர்ந்து வலுப்படுத்த இதன்போது இருவரும் அவதானம் செலுத்தினர்.

ஜெய்சங்கருடனான சந்திப்பில் இருநாட்டு பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்கள் தொடர்பில் ஜனாதிபதி கலந்துரையாடியுள்ளார்.

எட்கா உடன்படிக்கை மற்றும் இலங்கையில் இந்தியா முன்னெடுத்துவரும் அபிவிருத்தித் திட்டங்களின் தற்போதைய நிலைமைகள் குறித்தும் ஜெய்சங்கர் ஜனாதிபதியிடம் கேட்டறிந்துள்ளார். (ம-7)

## ஜன...

ஜூலி சங்கிற்கும் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவுக்கும் இடையில் சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பில் இரு நாடுகளுக்கும் இடையில் ஜனநாயகம், மனித உரிமைகள், முதலீடு, பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் தொடர்புகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2024.02.10
சீட்டிழுப்பு இலக்கம் 0212
Y 0 1 0 7 8 1 Y

தன நிதானய
திகதி - 2024.02.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1416
A 01 06 32 80 A
07550

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3628
சீட்டிழுப்பு திகதி 10.02.2024
Q 06 34 36 51
Q 96816

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.10
சீட்டிழுப்பு இலக்கம் 0695
விருச்சிகம் 04 28 53 58 விருச்சிகம்
30163 10

மஹஜன சம்பத
திகதி 2024/02/10
சீட்டிழுப்பு இலக்கம் 5386
F 0 0 0 0 6 8

மெகா பவர்
திகதி 10/02/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1734
X 16 10 24 28 36
51427

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி தன சம்பத
திகதி 10.02.2024 வெற்றி வாரம் 094 வர்ணம் நீலம்
H 0 6 9 7 3 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 28,727,372.00
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2360 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.02.10 தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
03 30 43 49 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.71,829,576.80

சனிதா
திகதி 2024.02.10 வெற்றி வாரம் 4521
வெற்றி இலக்கங்கள்
22 51 52 61 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,819,108.80

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4072 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.02.10 தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
10 18 49 62 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,618,205.60

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
C 31 26 46 51 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 504,450,486.20
1536 சிவப்பு 10.02.2024 சனிக்கிழமை
DLB தொலை பேசி 011-2 333 5464

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2186
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2024.02.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.90,142,414.40
வெற்றி இலக்கங்கள்
04 34 48 61 B

எமது விற்பனையில்...
25
அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம் தேசிய லொத்தர் சபையின் **மஹஜன சம்பத** (5384) 08.02.2024 சீட்டிழுக்கப்பட்ட டிக்கெட்டில்6இலக்கங்கள்பொருந்தியதில்
லட்சம் வெல்லப்பட்டுள்ளது
30.12.2023 சீட்டிழுக்கப்பட்ட Mega Milloions (0001) இல் 10 இலட்சம் வெல்லப்பட்டுள்ளது என்பதனை மகிழ்வாக அறியத் தருகின்றோம்.
**மிகக் குறுகிய நாட்களில் இரண்டு லட்சாதிபதி அள்ளி வழங்கிய எமது விற்பனையில் அடுத்த லட்சாதிபதி நீங்களே.**
**யாழ்.நகர விற்பனை முகவர்**
**கௌசல்யா விஜயகுமார்**
(C-8324) (N220067)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு வீடு தேவை

கொக்குவில், மருதனார்மடம், சுன்னாகம், மல்லாகம், ஆனைக்கோட்டை, கழாவடி, மானிப்பாய், உடுவில் ஆகிய பகுதிகளை அண்மித்த ஊர்களிலும் இணைந்த குளியலறை விரும்பத்தக்கது. குடும்பத்திற்கு.

(18947)

**077 935 2274**
**071 402 8974**

## துரித பொதிகள் சேவை

- சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
- அவுஸ்திரேலியா விசேட சலுகை உணவுப்பொருட்கள், மருந்து, எண்ணெய் வகைகள் என்பன எம் ஊடாக அனுப்பிட முடியும்.
- ஏனைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள் உண்டு.

**திருமுருகன் பொதிகள் சேவை**
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.

**0777 554 528** (18946)

கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர்

# கலாநிதி கலாமணி காலமானார்



(அல்வாய்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறை ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி தம்பிஐயா கலாமணி அவர்கள் நேற்று முன்தினம் இரவு (9) காலமானார்.

எழுத்தாளராக, நாடக ஆசிரியராக, நாட்டுக்கூத்துக் கலைஞராக, இசைக் கலைஞராக பல்பரிமாண ஆளுமை கொண்ட கலாநிதி கலாமணி அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளராக இருந்து கல்வித்துறைக்கு மிகப்பெரும் பணியாற்றியவர்.

அவரின் மறைவுக்கு பலரும் தமது இரங்கலைத் தெரிவித்துள்ளனர். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (10) அவரின் சொந்த இடமான அல்வாயில் நடைபெற்றது. (ம-7)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு சம்பியன் வீதியில் 1 பரப்பு 13 குழிக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: (18959)

**076 702 3565**

## Zoom மூலமான வகுப்பு வரலாறு

**SB.sanu**
(பிரபல பாடசாலை ஆசிரியர்)
(தரம் 06 - A/L வரை)

- தரம் 10,11 paper Class
- A/L புதிய பிரிவுகள் (2024,2025 A/L)

90 புள்ளிக்கு மேல் உத்தரவாதம்
தொடர்புகளுக்கு : 077 83 43 666 (18629)

## Dr.G.சுஜாகரனின் இலவச மருத்துவ ஆலோசனைகள்

தாமதமடையும் குழந்தை பாக்கியத்திற்கான சிகிச்சை முறைகள் தொடர்பான ஆலோசனைகள்



கொழும்பு நியூலங்கா மகப்பேற்று மருத்துவ நிலையத்தைச் சேர்ந்த மகப்பேற்று பெண் நோயியல் மகத்துவ நிபுணர்

**Dr.G. சுஜாகரன்**

அவர்கள் இலவச மருத்துவ ஆலோசனைகளை யாழ்நகரில் வழங்கவுள்ளார்.

**இடம்: IVF CLINIC**
15/3, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்நகரம்.

**திகதி : 16.02.2024** வெள்ளிக்கிழமை
**நேரம் : 10.00** மணி - மாலை **6.00** மணிவரை

தொடர்பு: (18907)
**077 766 7528, 077 755 0949**

## Techna Technical Institute

க.பொ.த உயர்தர தொழினுட்பப்பிரிவு

**இலவச செயன்முறை வகுப்புக்கள்**

உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்

| | |
|---|---|
| **A/L 2023 பிரிவு** பிரிவு 02 ஆரம்பம் | 13.02.2024 மாலை 2.00 PM |

அனைத்து செயன்முறைகளும்
இறுதிப்பரீட்சை காலப்பகுதி முழுவதும்
தொடர்ச்சியாக 7 நாட்களும் வகுப்புக்கள்...

| | |
|---|---|
| இலவச செயன்முறை **A/L 2024 பிரிவு** | ஆரம்பம் 14.02.2024 மாலை 3.00 PM |

வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.
Technatechnicalinstitute
**077 170 3549** (18954)

## விரைவு பொதிகள் சேவை

DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.

**Lanka Cargo Worldwide Express**
பணியாளர் தேவை
இல. 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**077 038 5584** (18958)

## Visa

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

**Visitor Visa**
வெளிநாடுகளில் உறவினர் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

Minor education - Canada ( 7 - 17 Years )
Visa Consultant
134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
**070 375 0002** (18958)

## வேலையாள் தேவை

மோட்டார்சைக்கிள் சேவிஸ் மெக்கானிக் வேலை தெரிந்தவர்கள் தேவை.
வயது : 18 - 30 வரை
சண்டிலிப்பாய் அருகாமையில் (18937)

**077 082 7349**

## வாகன கொள்வனவு

பொலிறோ, TATA பட்டா Ace, செனோன் வாகனங்கள் வாங்கப்படும்.

தொடர்புகளுக்கு : (18971)

**075 774 4652**

## விற்பனைக்கு

மின்சார(பற்றரி) பைசிக்கிள் விற்பனைக்கு (18938)

**077 993 5844**

## வீட்டுப்பணிப்பெண் தேவை

புலோலி பருத்தித்துறையில் உள்ள வீடொன்றில் வீட்டு வேலை செய்து, பிள்ளைகளை பராமரிக்க 40 - 50 வயதுடைய பணிப்பெண் தேவை. (18911)

**077 459 7938**

## வீடு விற்பனைக்கு

- வட்டுக்கோட்டை செட்டியார் மடத்துக்கு அண்மையில் வீடு விற்பனைக்கு உண்டு.
- கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் மாடிவீடு விற்பனைக்கு உண்டு.
- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்திக்கு அருகில் வீடு விற்பனைக்கு உண்டு.

தரகர் தேவையில்லை, வாங்குபவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

**Easy Real Estate** (18967)

**076 742 4301, 075 742 1612**

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322 · 077 77 19 322
Visit Visas · Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-8327)

## பௌதிகவியல் (A/L) 2024/2025/ Repeat

தனிப்பட்ட/ குழு வகுப்புகள்
மீட்டலும் கடந்தகால வினா விடைகளும்(Revision & PastPapers)
35 வருட கற்பித்தல் அனுபவமுள்ள ஆசிரியர்...
ஆ.நித்தியானந்தன் B.Sc, Dip.in.Ed
தொடர்புகளுக்கு : 076 799 9005
தூர இடங்களிற்கும் வந்து கற்பிக்கப்படும். (18591)

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | 266 /= | |
| 1 Kg றவை | 284 /= | |
| 1 Kg அரிசி மா | 195 /= | |
| 1 Kg கோதுமை மா | 184 /= | |
| 1 Kg தீட்டல்பச்சை அரிசி | 164 /= | |
| 1 Kg பெரிய கடலை | 619 /= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | 298 /= | |
| 1 Kg உளுத்தம் பருப்பு | 890 /= | |
| 1 Kg சன்லைட் பவுடர் றோஸ் | 365 /= | ~~450/=~~ |
| 01 Lux Soap | 145 /= | ~~175/=~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | 140 /= | ~~175/=~~ |
| 425g Supiri ரின்மீன் | 480 /= | ~~850/=~~ |
| 180ml Chik சம்போ | 380 /= | ~~480/=~~ |
| 300g நெஸ்டமோல்ட் | 580 /= | ~~620/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | 50 /= | ~~80/=~~ |

1040/=




~~1080/=~~
Max - 02

(18974)

**யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்**

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கைதடி A9 வீதி 2 ஆம் காணி 42 பரப்பு விற்பனைக்குண்டு.**

- கைதடிச் சந்தி 250m சித்த ஆயுர்வேத பல்கலைக்கழகம் முன்பாக
- 1 பரப்பின் விலை 24 இலட்சம்
- A9 வீதி 50m தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- வடமாகாண சபை 250m தூரம்

பார்வையிடும் நேரம்
காலை 8.00 மணிமுதல் மாலை 6.00வரை

தொடர்புகளுக்கு : (18970)

**077 468 3354**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org